
# தினபூமி

thinaboomi.com

வேலூர், வியாழன், மே 01, 2025 | சென்னை | மதுரை | திருச்சி | கோவை | நெல்லை | சேலம் | வேலூர் | புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00

**பஹல்காம் தாக்குதல் விவகாரம்: இந்தியா, பாக்., அமைச்சர்களுடன் விரைவில் அமெரிக்கா ஆலோசனை**

...2-ம் பக்கம்

**எல்லையில் பதற்றம்: பிரதமர் மோடியின் ரஷ்ய பயணம் ரத்து**

...3-ம் பக்கம்

**இங்கி.,க்கு எதிரான டெஸ்ட்: வீரர்களை இறுதி செய்வதில் தீவிரம் காட்டும் பி.சி.சி.ஐ.**

...6-ம் பக்கம்



● சென்னை கொளத்தூர் ஜமாலியா லேன் திட்டப்பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ. 23 கோடியே 4 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 130 அடுக்குமாடி குடியிருப்புகளை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

### 2026-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.

# 234 தொகுதிகளில் வெற்றி பெற்றாலும் ஆச்சரியமில்லை

## மயிலை எம்.எல்.ஏ. இல்ல திருமண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பரபரப்பு பேச்சு

சென்னை, மே 01-

**வருமான வரித்துறை, புலனாய்வுத்துறை, சி.பி.ஐ., அமலாக்கத்துறை என எதுவாக இருந்தாலும் கவலைப்பட வேண்டாம். ஏனென்றால், நெருக்கடியைப் பார்த்து வளர்ந்திருக்கக் கூடியவர்கள் நாம் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். மேலும், நம்மை எதிர்க்கக் கூடியவர்கள் எந்த நிலையில் வந்தாலும் சரி எப்படிப்பட்ட கூட்டணியை வைத்துக் கொண்டு வந்தாலும் சரி, ஒரு கை பார்ப்போம் என்றும் அவர் கூறியுள்ளார்.**

**படிப்படியாக உயர்ந்து...**

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னையில் நடைபெற்ற மயிலாப்பூர் தொகுதி எம்.எல்.ஏ., வேலுவின் மகள் திருமண விழாவில் கலந்து கொண்டு பேசியதாவது:- சட்டமன்ற உறுப்பினரான வேலு கட்சியில் பொறுப்பேற்று பணியாற்றி படிப்படியாக உயர்ந்து இன்றைக்கு மாவட்ட செயலாளர் என்ற பொறுப்பை ஏற்றிருக்கிறார். ஏதோ, ஊர்ந்து வந்து ஏறவில்லை. தவழ்ந்து வந்து ஏறவில்லை, படிப்படியாகதான் ஏறியிருக்கிறார். ஊர்ந்து, தவழ்ந்து என்று சொல்கின்ற பொழுது ஏன் கரவொலி எழுப்பினீர்கள் என்று எனக்கும் புரிகிறது. உங்களுக்கும் புரிகிறது.

**தமிழகம் வளர்ச்சி....**

ஒன்றும் இல்லை, நடைபெற்று முடிந்திருக்கும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் நான் நிறைவாக காவல்துறை மானியக் கோரிக்கையில் பதிலளித்துப் பேசும்பொழுது தமிழ்நாட்டைப் பற்றி சொல்லும்போது, தமிழ்நாடு ஏற்கெனவே எப்படி இருந்தது. இப்போது எப்படி மாறியிருக்கிறது, வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்பதைப் பற்றி குறிப்பிட்டு சொல்வதற்காக ஒரு உதாரணத்தை சொன்னேன். ஊர்ந்து கொண்டிருந்த தமிழ்நாடு, இன்றைக்கு கம்பீரமாக நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் நின்று கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

**சிறப்பாக பேசினார்...**

அதற்கு, எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் உதயகுமார் நான் பேசி முடித்த போது, அதோடு விட்டிருந்தால் பிரச்சினையே வந்திருக்காது. நான் பேசியது அப்படியே போய் இருக்கும். வெளியிலும் வந்திருக்காது. பிரபலமாக இந்த செய்தியும் வந்திருக்காது. தானாக வந்து மாட்டிக்கொண்டார்கள். நான் பேசி முடித்ததற்குப் பிறகு எழுந்து சபாநாயகரைப் பார்த்து முதல்வர் சிறப்பாக பேசினார். தெளிவாகப் பேசினார். அழகாகப் பேசினார். ஆனால், இடையில் "ஊர்ந்து வந்து" என்பதை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று சொன்னார்.

**வைரலாகி வருகிறது...**

நான் உடனே கேட்டேன். ஊர்ந்து என்பது அவர்களுக்கு பிடிக்கவில்லை என்று சொன்னால், தவழ்ந்து என்று போட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். குழந்தைகள் தவழ்ந்து வருவது தவறா? என்று சொன்னேன். ஏற்கெனவே, எஸ்.டி.பி.ஐ. மாநாட்டில் இதே எடப்பாடி பழனிச்சாமி, அவரின் புகழைப் பற்றி பேசுகின்றபோது, அவர் எப்படியெல்லாம் முதல்வர் பதவிக்கு வந்தார் என்பது குறித்து அவரே பேசியிருக்கிறார். நான் தவழ்ந்து, தவழ்ந்து, படிப்படியாக வந்து முதல்வராக வந்திருக்கிறேன் என்று அவரே பேசியிருக்கிறார். அது தற்போது வைரலாகி

(கடைசி பக்கம் பார்க்க)

### குழந்தைகளுக்கான தமிழ் பெயர்களுக்கு

# இணையதளம் தொடங்கப்படும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்

சென்னை, மே 01-

**குழந்தைகளுக்கான அழகிய தமிழ்ப் பெயர்களும், அதற்கான பொருளும் அடங்கிய இணையதளம் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் புதிய இணையதளம் தொடங்கப்படும் என மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

தி.மு.க.வின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் மயிலாப்பூர் தொகுதி எம்.எல்.ஏ.வும், தி.மு.க. மாவட்ட செயலாளருமான வேலுவின் மகளின் திருமணத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மணமக்களை வாழ்த்திப் பேசிய மு.க.ஸ்டாலின், "திருமணம் செய்து கொள்ளும் மணமக்களை நான் கேட்டுக்கொள்கிறேன், உங்களுக்கு பிறக்கப் போகும் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களை சூட்டுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

இதனை தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், குழந்தைகளுக்கான அழகிய தமிழ்ப் பெயர்களும், அதற்கான பொருளும் அடங்கிய இணையதளம் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் தொடங்கப்படும் என்று பதிவிட்டுள்ளார். முதல்வரின் அறிவிப்புக்கு தமிழ் மொழி ஆர்வலர்கள் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

# நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புதுடெல்லி, மே 01-

**நாடு முழுவதும் அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி இருப்பதாக அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங், நிர்மலா சீதாராமன், நிதின் கட்கரி, சிவராஜ் சிங் சவுகான், எஸ். ஜெய்சங்கர், தர்மேந்திர பிரதான், பியூஷ் கோயல், அஸ்வினி வைஷ்ணவ், மனோகர் லால் கட்டார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அஸ்வினி வைஷ்ணவ், "வரவிருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதிவாரி கணக்கெடுப்பு சேர்க்கப்பட வேண்டும் என்று அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு முடிவு செய்துள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது, அது எப்போதும் சாதிவாரி கணக்கெடுப்பை எதிர்த்தே வந்துள்ளது. 2010 ஆம் ஆண்டில், மறைந்த மன்மோகன் சிங், சாதிவாரி கணக்கெடுப்பு விஷயத்தை அமைச்சரவையில் பரிசீலிக்க வேண்டும் என்று கூறினார். இந்த விஷயத்தை பரிசீலிக்க அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டது. பெரும்பாலான அரசியல் கட்சிகள் சாதிவாரி கணக்கெடுப்பை வலியுறுத்தியதை அடுத்தே, காங்கிரஸ் அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முடிவு செய்தது.

மாநில அளவில் தனியாக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த அவசியமில்லை. அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது சாதிவாரியாக கணக்கெடுப்பு நடைபெறும். சாதிவாரி கணக்கெடுப்பு வெளிப்படையாக பதிவு செய்யப்படும். காங்கிரஸூம் இண்டியா கூட்டணி கட்சிகளும் சாதிவாரி கணக்கெடுப்பை ஒரு அரசியல் கருவியாக மட்டுமே பயன்படுத்தியுள்ளனர் என்பது நன்கு புரிந்து கொள்ளப்படுகிறது. சில மாநிலங்கள் சாதிகளைக் கணக்கிட கணக்கெடுப்புகளை நடத்தியுள்ளன. சில மாநிலங்கள் இதைச் சிறப்பாகச் செய்திருந்தாலும், வேறு சில மாநிலங்கள் அரசியல் கோணத்தில் இருந்து மட்டுமே இத்தகைய கணக்கெடுப்புகளை நடத்தின. இத்தகைய கணக்கெடுப்புகள் சமூகத்தில் சந்தேகங்களை ஏற்படுத்தின. அரசியலால் நமது சமூக அமைப்பு பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதிவாரி கணக்கெடுப்பு சேர்க்கப்பட வேண்டும்." என தெரிவித்தார்.

மேலும் அவர், "ஷில்லாங்கிலிருந்து சில்சார் வரை ரூ.22,864 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் அதிவேக வழித்தட நெடுஞ்சாலைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அதோடு, 2025-26 சர்க்கரை பருவத்திற்கான

(கடைசி பக்கம் பார்க்க)

### புகார் அளிக்க காவல்நிலையம் வருவோரை

# கண்ணியத்துடன் நடத்துங்கள்: சுப்ரீம் கோர்ட் அறிவுறுத்தல்

புது டெல்லி, மே 01-

**ஏதேனும் ஒரு குற்றச் சம்பவம் தொடர்பாக புகார் அளிக்க காவல்நிலையம் வரும் ஒவ்வொருவரும் மிகவும் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 21-ன்படி, அது அடிப்படை உரிமை என்றும் தெரிவித்துள்ளது.**

தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம், சம்பந்தப்பட்ட காவல்துறை ஆய்வாளரிடமிருந்து ரூ.2 லட்சத்தை அபராதமாகப் பிடித்து அதனை சம்பந்தப்பட்டவருக்கு அளிக்குமாறு தமிழக அரசுக்குப் பிறப்பித்த உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை உறுதி செய்திருக்கும் சுப்ரீம் கோர்ட், ஏதேனும் ஒரு குற்றச்சம்பவம் தொடர்பாக புகார் அளிக்க காவல்நிலையம் வரும் ஒவ்வொருவரும் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும். இது இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 21-ன்படி இந்திய குடிமகனின் அடிப்படை உரிமையாகும் என்று தெரிவித்துள்ளனர்.

மோசடியில் பணம் இழந்த இளைஞர் தனது பெற்றோருடன் ஸ்ரீவில்லிபுத்தூர் காவல்நிலையம் சென்றுள்ளார். காவல் ஆய்வாளரிடம் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. அதில், மூன்று பணப் பரிவர்த்தனைகள் வெவ்வேறு இடங்களிலிருந்து நடத்தப்பட்டுள்ளதால், காவல் ஆய்வாளர் அனுமதி இல்லாமல் இந்த புகாரை ஏற்க முடியாது என்று கூறியிருக்கிறார். மீண்டு அவர்கள்

(கடைசி பக்கம் பார்க்க)

### இளநிலை மருத்துவப்படிப்புகள்:

# நீட் நுழைவு தேர்வுக்கான ஹால் டிக்கெட் வெளியீடு

சென்னை, மே 01-

**இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு எழுதவுள்ள மாணவர்களுக்குரிய ஹால் டிக்கெட்களை என்.டி.ஏ. தற்போது வெளியிட்டுள்ளது.**

நாடு முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்புகள் மற்றும் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட் - NEET) மூலம் மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது. அதேபோல், ராணுவ நர்சிங் கல்லூரிகளில் பிஎஸ்சி நர்சிங் படிப்புக்கு நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வானது தேசிய தேர்வுகள் முகமை (என்.டி.ஏ.) சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி 2025-26-ம் கல்வியாண்டு சேர்க்கைக்கான நீட் தேர்வு தமிழ், ஆங்கிலம், இந்தி உட்பட 13 மொழிகளில் மே 4-ம் தேதி நேரடி முறையில் நடைபெறவுள்ளது. இதற்கான இணையதள விண்ணப்பப் பதிவு கடந்த பிப்ரவரி 7-ல் தொடங்கி மார்ச் 7-ம் தேதியுடன் நிறைவு பெற்றது. இதற்கு நாடு முழுவதும் சுமார் 21 லட்சம் பேர் வரை விண்ணப்பித்துள்ளனர். இந்நிலையில் தேர்வு எழுதவுள்ள மாணவர்களுக்கான ஹால்டிக்கெட்களை என்டிஏ தற்போது வெளியிட்டுள்ளது.

அவற்றை neet.nta.nic.in என்ற இணையதளத்தில் சென்று மாணவர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். கூடுதல் தகவல்களை www.nta.ac.in என்ற என்.டி.ஏ. இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். ஏதேனும் சந்தேகம் இருப்பின் 011-4075 9000/69227700 என்ற தொலைபேசி எண் அல்லது neetug2025@nta.ac.in மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம். தேர்வு முடிவுகள் ஜூன் 14-ம் தேதி வெளியிடப்படும் என்று என்டிஏ வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பஹல்காம் தாக்குதல்:

# பிரதமர் தலைமையில் மத்திய அமைச்சரவை குழு ஆலோசனை

புதுடெல்லி, மே 01-

**பஹல்காம் தாக்குதலையடுத்து பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் கூட்டம் தொடங்கி நடைபெற்றது. இதில் முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது.**

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலாப் பகுதியில் கடந்த ஏப். 22 அன்று பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டம் நேற்று (புதன்கிழமை) காலை 11.30 மணியளவில் தொடங்கி நடைபெற்றது.

பிரதமர் மோடியின் இல்லத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், அமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர். பஹல்காம் தாக்குதலையடுத்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பதட்ட சூழல் நிலவி வரும் நிலையில் இந்த கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என்று தெரிகிறது. நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) மத்திய உள்துறை அமைச்சகம் முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

அதேபோல, முன்னதாக பஹல்காம் தாக்குதல் தொடர்பாக பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவின் முதல் கூட்டம் கடந்த ஏப். 23 அன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தின் முடிவில், அட்டாரி - வாகா எல்லை மூடல், பாகிஸ்தானியர்கள் இந்தியா வரத் தடை, சிந்து நதிநீர் பகிர்வு ஒப்பந்தம் ரத்து உள்ளிட்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன.

### தமிழகத்தல் 60,000 பேருக்கு வேலை வழங்கும்

# மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி திட்டத்தை முதல்வர் வெளியிட்டார்

சென்னை, மே 01-

**முதல்வர் ஸ்டாலின் நேற்று (ஏப். 30) மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்திக்கான தமிழ்நாடு மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி சிறப்பு திட்டத்தினை வெளியிட்டார். இதன் மூலம் தமிழ்நாட்டில் 30,000 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து 60,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க இயலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது., மின்னணுவியல் துறையில், உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில், தமிழ்நாடு ஏற்கெனவே அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாக விளங்குகிறது. மின்னணுவியல் துறையில், மேலும் மதிப்புக் கூட்டப்பட்ட உற்பத்தியை ஊக்குவித்திடவும், குறைக்கடத்தி துணைப் பிரிவுகளில் பெருமளவு முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணு கொள்கை 2024-தனை அறிமுகப்படுத்தியது.

இக்கொள்கை மின்னணுப் பொருள்கள் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்ந்திட வழிவகுத்துள்ள நிலையில், மின்னணுவியல் உற்பத்தி சூழலமைப்பை மேலும் மேம்படுத்தும் வகையில், முதல்வர் ஸ்டாலின் மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி சிறப்பு திட்டத்தை நேற்று வெளியிட்டார்.

மத்திய அரசின் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம், மின்னணு உபகரணங்கள் உற்பத்தி திட்டம் என்ற திட்டத்தின் கீழ் பயனடையும் நிறுவனங்களை மாநிலத்திற்கு ஈர்த்திடும் வகையில், மத்திய அரசுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள மானியத்திற்கு இணையாக, தமிழ்நாடு அரசும் ஊக்கத்தொகை வழங்கிட இந்த திட்டம் வழிவகை செய்யும். இதன்மூலம், தமிழ்நாட்டில் 30,000 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து 60,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க இயலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -46.14 | -1.75 |
| பாயின்ட் 80,242.24 | பாயின்ட் 24,334.20 |

**தங்கம்** 1 சவரன் ₹71,840 · 1 கிராம் ₹8,980

**வெள்ளி** 1 கிலோ ₹111,000 · 1 கிராம் ₹111.00

**டாலர்** ₹84.61

**பெட்ரோல்** ₹100.75 · **டீசல்** ₹92.34

### பஹல்காம் தாக்குதல் விவகாரம்:
# இந்தியா, பாக்., அமைச்சர்களுடன் விரைவில் அமெரிக்கா ஆலோசனை

**வாஷிங்டன், மே 01-**

இந்தியா, பாகிஸ்தான் வெளியுறவு மந்திரிகளுடன் அமெரிக்கா ஆலோசனை நடத்த உள்ளதாக தெரிவித்துள்ளது.

காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலா தளத்தில் கடந்த 22-ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்ட சம்பவம், இந்தியா மட்டுமின்றி சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த பயங்கரவாத தாக்குதலால் இந்தியா-பாகிஸ்தான் உறவில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இதன் எதிரொலியாக சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக இந்திய அரசு அறிவித்தது. மேலும் பாகிஸ்தானியர்களுக்கான விசா சேவைகள் ரத்து செய்யப்படுவதாகவும், இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் நாட்டவர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் மத்திய அரசு அதிரடியாக அறிவித்தது. இதே போல் பாகிஸ்தான் அரசு, தனது வான்வெளியில் இந்திய விமானங்கள் பறக்க தடை விதிக்கப்படுவதாகவும், சிம்லா ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாகவும் அடாவடி அறிவிப்புகளை வெளியிட்டது. மேலும் இரு நாட்டு அரசுகளும் தங்கள் ராணுவ படைகளை தயார் நிலையில் வைத்திருக்கின்றன.

இந்த சூழலில், இந்தியா, பாகிஸ்தான் வெளியுறவு மந்திரிகளுடன் பேச உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க அரசின் செய்தி தொடர்பாளர் டாமி புரூஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

"அமெரிக்க பாதுகாப்புத் துறை செயலாளர் மார்க்கோ ரூபியோ இன்னும் ஓரிரு தினங்களில் இந்தியா, பாகிஸ்தான் வெளியுறவு மந்திரிகளுடன் பேச உள்ளார். இந்தியா, பாகிஸ்தான் விவகாரத்தை நாங்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். வெளியுறவுத்துறை மட்டுமின்றி, பல்வேறு அளவுகளிலும் இருநாட்டு அரசுகளிடம் பேச உள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பாகிஸ்தானின் கைபர் பக்துன்குவாவில் குண்டுவெடிப்பில் 2 குழந்தைகள் பலி

**கைபர் பக்துன்குவா, மே 01-**

பாகிஸ்தானில் கைபர் பக்துன்குவாவில் குண்டுவெடிப்பில் 2 குழந்தைகள் பலியாகியுள்ளனர்.

கைபர் பக்துன்குவாவிலுள்ள தெற்கு வசீரிஸ்தான் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அஸாம் வர்ஸாக் சோதனைச் சாவடிக்கு அருகில் நேற்று (ஏப்.30) ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 3 குழந்தைகள் படுகாயமடைந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, உடனடியாக அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி 2 குழந்தைகள் பரிதாபமாக பலியாகினர். மேலும், ஒரு குழந்தை உயிருக்கு ஆபத்தான சூழலில் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, அந்நாட்டு காவல் துறையினர் கூறுகையில், அந்தக் குழந்தைகள் அங்கு குண்டு வெடிப்பு நிகழ்ந்த சமயத்தில் அப்பகுதியைக் கடந்ததினால் இந்தத் துயரச் சம்பவம் அரங்கேறியுள்ளதாகக் கூறியுள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னையில் நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோவின் மகள் ராகவி இளங்கோ - ஏ.கே. சச்சிந்தர் ஆகியோரது திருமண உறுதியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, என். கயல்விழி செல்வராஜ், பாராளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மத்திய அரசின் இலக்கை தாண்டி
# நீர்மின் உற்பத்தியில் தமிழ்நாடு 80 கோடி யூனிட் கூடுதல் உற்பத்தி

**சென்னை, மே 01-**

மத்திய அரசு 2024-25ம் ஆண்டில் தமிழகத்தில் 400 கோடி யூனிட் நீர்மின் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்த நிலையில், அதை விட கூடுதலாக 80 கோடி யூனிட் மின்சாரம் கூடுதலாக தமிழக மின்வாரியம் உற்பத்தி செய்துள்ளது.

தமிழக மின்வாரியத்துக்கு கோவை, ஈரோடு, நீலகிரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 2,321 மெகாவாட் திறனில் 47 நீர்மின் நிலையங்கள் உள்ளன. இதில், ஒரு யூனிட் மின்னுற்பத்தி செய்ய செலவு சராசரியாக 75 காசாக உள்ளது. இருப்பினும், போதிய மழை இல்லாததால் தினமும் சராசரியாக 750 முதல் ஆயிரம் மெகாவாட் மட்டுமே மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்நிலையில், மத்திய மின்சார ஆணையம் 2024-25ம் ஆண்டு தமிழக நீர்மின் நிலையங்களில் 400 கோடி யூனிட் மின்னுற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்திருந்தது. கடந்த ஆண்டில் தென்மேற்கு பருவமழை பொழிவு அதிகம் இருந்ததால், அணைகளுக்கும் நீர்வரத்து அதிகம் இருந்தது. இதுகுறித்து நீர்மின் நிலையங்களில் 480 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது 2023-24-ல் 371 கோடி யூனிட்களாக இருந்தது. மத்திய அரசு நிர்ணயித்த இலக்கை விட கடந்த ஆண்டில் கூடுதலாக 80 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாக்.கில் 10 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

**லாகூர், மே 01-**

பாகிஸ்தானில் 10 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை செய்யப்பட்ட நிலையில் உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது.

பாகிஸ்தானில் பலூசிஸ்தான் கிளர்ச்சிப்படை, தெக்ரிக் ஐ தலிபான் பாகிஸ்தான் உள்பட பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இந்த பயங்கரவாத அமைப்புகளுக்கும், பாதுகாப்புப்படையினருக்கும் இடையே அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வருகிறது. இந்தநிலையில், பலுசிஸ்தான் மாகாணத்தில் இரண்டு தனித்தனி சம்பவங்களில் 10 பயங்கரவாதிகளை பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் கொன்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கெச், ஜியாரத் மாகாணத்தில் பயங்கரவாதிகள் இருப்பது குறித்து அந்நாட்டின் உளவுத்துறைக்குத் ரகசிய தகவல் வந்தது. இதனிடையே இன்டர்-சர்வீசஸ் பப்ளிக் ரிலேஷன்ஸ் படி, மாவட்டங்களில் தனித்தனி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. பாதுகாப்புப் படையினருக்கும் ஆயுதமேந்திய பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. அப்போது பயங்கரவாதிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில் 10 பயங்கரவாதிகளைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர். கொல்லப்பட்ட பயங்கரவாதிகளிடமிருந்து ஆயுதங்கள், வெடிமருந்துகள் மீட்கப்பட்டன, அவர்கள் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான ஏராளமான தாக்குதல்களிலும் பொதுமக்களைக் கொன்றதிலும் ஈடுபட்டதும் தெரியவந்துள்ளது.

### ராஜஸ்தானில் பயங்கரம்:
# கள்ளச்சாரயம் குடித்த 8 பேர் பலி

**அல்வார், மே 01-**

ராஜஸ்தானில் 3 நாட்களில் கள்ளச்சாராயம் குடித்த 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

அல்வார் மாவட்டத்திலுள்ள பையின்ட்பூர் மற்றும் கிஷான்பூர் ஆகிய கிராமங்களில் பல காலமாக கள்ளச்சாராயம் விற்கப்பட்டு வருவதாகவும், காவல் துறை அதிகாரிகளிடம் புகாரளித்தும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், கடந்த ஏப்.26 ஆம் தேதியன்று கள்ளச்சாராயம் குடித்த பையின்ட்பூரைச் சேர்ந்த சுரேஷ் வால்மிகி (வயது 45) என்பவர் பலியானார். அதைத் தொடர்ந்து, கடந்த ஏப்.27 அன்று கிஷன்பூரைச் சேர்ந்த ராம் கிஷோர் (47) மற்றும் ராம் குமார் (35) கள்ளச்சாராயம் குடித்ததால் ஏற்பட்ட பாதிப்பினால் பலியானார். இதனைத் தொடர்ந்து, ஏப்.28 ஆம் தேதியன்று மட்டும் ஒரே நாளில் கள்ளச்சாராயம் குடித்த 5 பேர் பலியாகியுள்ளனர். உயிரிழந்தவர்கள் அனைவரும் அந்த இரு கிராமங்களைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது.

மேலும், உயிரிழப்புகள் ஏற்படத் துவங்கி 3 நாள்கள் கழித்தே மாவட்ட நிர்வாகம் அங்கு வந்ததாகவும், அவர்களது அலட்சியப் போக்கே இந்தச் சம்பவத்துக்கு முக்கிய காரணம் என அக்கிராமவாசிகள் குற்றம்சாட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் அப்பகுதி முழுவதும் பெரும் அதிர்வலைகளை உண்டாக்கியுள்ள நிலையில் இது குறித்து முழுமையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

# கோவில் வளாகத்தில் ரீல்ஸ் வீடியோ: மன்னிப்பு கேட்ட மாணவர்-மாணவி

**நெல்லை, மே 01-**

நெல்லையப்பர் கோவில் வளாகத்தில் ரீல்ஸ் வீடியோ எடுத்த மாணவர், மாணவிகள் மன்னிப்பு கேட்டனர்.

தென்தமிழகத்தில் பிரசித்தி பெற்ற நெல்லை டவுனில் நெல்லையப்பர்- காந்திமதி அம்பாள் கோவில் உள்ளது. இங்கு தினமும் உள்ளூர் பக்தர்கள் தவிர ஏராளமான வெளியூர் பக்தர்களும், சுற்றுலா பயணிகளும் வந்து செல்கிறார்கள். மேலும் புதுமண தம்பதிகள், கல்லூரி மாணவ - மாணவிகளும் வந்து வழிபடுவதுடன் செல்போன் மூலம் செல்பி எடுக்கிறார்கள்.

உள்பிரகார வீதிகள், ரதவீதிகள், இசைத்தூண், கல்தூண்களில் உள்ள சிற்பங்களின் அருகில் நின்றும் புகைப்படம், வீடியோ எடுத்து செல்கிறார்கள். இதற்கு பெரிதாக கட்டுப்பாடு எதுவும் விதிக்கப்படுவதில்லை. இவ்வாறு கோவில், சுற்றுலா தலங்களில் எடுக்கும் புகைப்படங்களை சிலர் தங்களது நண்பர்களுக்கு பகிர்வதுடன், சமூக வலைத்தளங்களில் பதிவேற்றமும் செய்கிறார்கள். இதேபோல் நெல்லையப்பர் கோவிலுக்கு வந்த ஒரு மாணவரும், மாணவியும் சேர்ந்து அம்பாள் சன்னதி அருகே நின்று நடனமாடி வீடியோவாக பதிவு செய்தனர். பின்னர் அதனை பிரபல பாடலுடன் இணைத்து 'ரீல்ஸ்' வீடியோவாக சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்தனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியதால், பக்தர்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியது.

இதையடுத்து கோவில் நிர்வாக அலுவலர் அய்யர் சிவமணி நேற்று நெல்லை மாநகர சைபர் கிரைம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புனிதமிக்க இடமான சுவாமி நெல்லையப்பர் கோவில் வளாகத்தில் 'ரீல்ஸ்' வீடியோ எடுத்து வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இருந்தார். இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்களை தேடி வருகிறோம் சைபர் கிரைம் போலீசார் தெரிவித்தனர். இதற்கிடையே நெல்லையப்பர் கோவிலில் நடனமாடி 'ரீல்ஸ்' வீடியோ வெளியிட்ட மாணவரும், மாணவியும் நேற்றுமுன்தினம் தங்களது செயலுக்கு மன்னிப்பு கேட்டு மற்றொரு வீடியோ வெளியிட்டனர். அதில், 'நெல்லையப்பர் கோவிலில் நடனமாடி வீடியோ எடுத்ததற்கும், அதை வெளியிட்டதற்கும் மன்னிப்பு கேட்டு கொள்கிறோம். அந்த வீடியோவை சமூக வலைத்தளத்தில் இருந்து நீக்கி விட்டோம். இனிமேல் இது போன்ற இடங்களில் வீடியோ எடுக்க மாட்டோம்'' என்று தெரிவித்துள்ளனர்.

# அடுத்த போப் ஆண்டவர் நான் தான்; அமெரிக்க அதிபர் டிரம்ப் நகைச்சுவை

**வாஷிங்டன், மே 01-**

அடுத்த போப் ஆண்டவர் நான் தான் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் நகைச்சுவையாக தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப் பிரான்சிஸ் (வயது 88), உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 21-ந் தேதி வாடிகனில் மரணம் அடைந்தார். அவரது உடல் கடந்த 21-ந் தேதி முதல் வாடிகன் புனித பீட்டர் பேராலயத்தில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. உலகம் முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து போப் ஆண்டவரின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். அதனை தொடர்ந்து அவரது உடல் 26-ந் தேதி ரோமில் அடக்கம் செய்யப்பட்டது. போப் பிரான்சிஸ் மறைவை தொடர்ந்து புதிய போப் யார்? என்ற எதிர்பார்ப்பு உலகம் முழுவதும் எழுந்துள்ளது. இந்நிலையில் போப் பிரான்சிஸ் மறைவுக்குப் பிறகு வரும் 7ம் தேதி புதிய போப்பை தேர்வு செய்வதற்கான கர்தினால்களின் மாநாடு தொடங்க இருக்கிறது.

உலகம் முழுவதும் 252 கர்தினால்கள் உள்ள நிலையில், போப் ஆண்டவரை தேர்வு செய்வதற்கான வாக்களிக்கும் தகுதி படைத்த 80 வயதுக்கு உட்பட்டவர்கள் 135 பேர் ஆவர். அவர்கள் தங்களுக்குள்ளே இருந்து ஒருவரை புதிய போப் ஆக தேர்வு செய்வார்கள். இதற்காக வாடிகன் சிஸ்டைன் சிற்றாலயத்தில் 7-ந் தேதி கூடி தங்களுக்குள்ளே இருந்து ஒருவரை புதிய போப் ஆண்டவராக தேர்வு செய்கிறார்கள். இது ஓரிரு நாளிலோ அல்லது வாரக்கணக்கிலோ நீளும் என்பது குறிப்பிடத்தக்கது. ரோமில் போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கலந்து கொண்டார்.

இந்நிலையில், புதிய போப் தேர்வு குறித்து நகைச்சுவையாகப் பேசியுள்ளார். கத்தோலிக்க திருச்சபையை யார் வழிநடத்த வேண்டும் என்பது குறித்த அவரது கருத்து கேட்கப்பட்டதற்கு டிரம்ப், "நான் போப் ஆண்டவராக இருக்க விரும்புகிறேன்; அதுதான் எனது முதல் தேர்வாக இருக்கும் என்றார். மேலும் போப் பிரான்சிஸுக்குப் பதிலாக யார் இருக்க வேண்டும் என்று கேட்டபோது, பதில் அளித்த டிரம்ப், நியூயார்க் வெளியே இருக்கும் ஒரு கார்டினல் எங்களிடம் இருக்கிறார், அவர் மிகவும் நல்லவர், எனவே என்ன நடக்கிறது என்று பார்ப்போம் இவ்வாறு அவர் கூறினார்.


# தங்கம் விலையில் மாற்றமில்லை

**சென்னை, மே 01-**

அட்சய திருதியை நாளில் தங்கம் வாங்கினால், செல்வம் பெருகும் என்பது நம்பிக்கை. இந்த ஆண்டு அட்சய திருதியை திதி நேற்று முன்தினம் இரவு 8.40 மணிக்குத் தொடங்கி, நேற்று (30-ம்) மாலை 6.45 மணிவரை நீடித்தது. இதையடுத்து, நகை வியாபாரிகள் நேற்று காலையிலேயே அட்சய திருதியை சிறப்பு விற்பனையைத் தொடங்கினர். நகைக் கடைகளில் சிறப்பு விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிறப்பு கவுன்ட்டர்கள் அமைக்கப்பட்டு காலை 6 மணிக்கே நகைக் கடைகள் திறக்கப்பட்டன. நகைகளுக்கு லட்சுமி குபேர பூஜை செய்து தரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், அட்சய திருதியை தினமான நேற்று (ஏப்.30) சென்னையில் தங்கம் விலை எந்த மாற்றமும் இன்றி ஒரு கிராம் ரூ.8,980 ஆகவும், பவுன் ரூ.71,840 ஆகவும் விற்பனையானது. வெள்ளி ஒரு கிராம் ரூ.111-க்கு விற்பனையானது. ஒரு கிலோ பார் வெள்ளி ரூ.1,11,000-க்கு விற்பனையாகிறது. இது நகை வாங்குவோருக்கு சிறு ஆறுதலாக அமைந்துள்ளது.

**01-05-2025**




**மேஷம்:-** நற்செய்திகளில் மூலம் புதிய உற்சாகம் பிறக்கும் நன்னாள். தனவரவு கூடும். மனையாளின் ஒத்துழைப்பு மன மகிழ்ச்சி தரும். முகநூல் மூலம் நட்பு வட்டம் விரிவடையும்.

**ரிஷபம்:-** சுக சௌக்கியத்திற்கு பங்கம் விளையும். எதிர்பார்த்த இனங்களில் இருந்து பணவரவு தாமதப்படும். எதையும் எளிதாக சாதிக்கும் திறன் பெறுவீர்கள். அக்கறையுடன் படித்தால் அதிக மதிப்பெண் பெறலாம்.

**மிதுனம்:-** பல வழிகளிலும் தனவரவு தாராளமாக ஏற்படும். நினைத்த காரியங்கள் நினைத்தது போல் நடக்கும். வியாபாரிகளின் புத்தி சாதுர்யம் மற்றும் வாக்கு வன்மையால் பொருளாதார நிலை மேம்படும்.

**கடகம்:-** பெண்களால் வீண் செலவு களும் அதன் காரணமாக பணமுடையும் ஏற்படும். உண்ணவும் நேரமின்றி உழைப்பு அதிகமாகும். நேர்வழிகளில் பணம் செலவு செய்தால் நிம்மதி பிறக்கும்.

**சிம்மம்:-** எதிர்பார்த்தபடி தனவரவுகள் தாராளமாக இருக்கும். ஆரோக்கியம் மேம்படும். எண்ணிய எண்ணங்கள் எண்ணியபடி ஏற்றம் தரும். புத்தி சாதுர்யம் மற்றும் வாக்குவன்மையால் பொருளாதார நிலை மேம்படும்.

**கன்னி:-** புதிய அரசு வேலை வாய்ப்புகள், பதவி உயர்வு, ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**துலாம்:-** தொழில் மற்றும் வியாபாரம் சம்பந்தமாக பெரியோர்களின் சந்திப்பு பயன் தரும். மனதில் நினைத்தது மாறாமல் நடக்கும். பெண்களால் நன்மை உண்டாகும். ஸ்த்ரீ போக விருத்தி உண்டு.

**விருச்சிகம்:-** உண்மைக்கும், நியாயத்திற்கு புறம்பாக நடக்காதீர்கள். மனைவியின் தீய எண்ணங்கள் மூலம் மற்றவர்கள் பகை ஏற்படும். அடங்கி நடந்தால் அதிகாரிகளிடம் ஆதாயம் பெறலாம்.

**தனுசு:-** அதிக பணவரவால் மனதில் ஆனந்தம் நிலவும். அழகிய ஆடை ஆபரணங்கள் சேரும். மாணவர்களுக்கு அரசாங்க ஆதரவு மற்றும் உதவிகள் தடையின்றி கிடைக்கும்.

**மகரம்:-** தனவரவு கூடும். எதிரிகள் பணிவர். எதிர்ப்புகள் குறையும். நண்பர்கள் உதவி நன்மை பயக்கும். அரசு உதவியால் தொழில் சிறக்கும். விரும்புவது எதுவாயினும் விரைந்து கிட்டும்.

**கும்பம்:-** வெளியூர் பயணங்களில் கவனம் தேவை. குழந்தைகளுக்கு மருத்துவ கவனிப்பு தேவைப்படும். கவனமாகப் படித்தால் கல்வியில் வெற்றிகளைக் குவிக்கும்.

**மீனம்:-** தாயின் உடல் ஆரோக்கியத்தில் தனிக் கவனம் செலுத்துங்கள். தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சி திருவினையாக்கும். துணிந்து செயல்பட்டு தோல்வியைத் தவிருங்கள்.

### ஆந்திர மாநிலத்தில் சோகம்:
# கோவில் சுவர் இடிந்து விழுந்து 7 பேர் பலி

**விசாகப்பட்டினம், மே 01-**

ஆந்திரப் பிரதேசம் - விசாகப்பட்டினத்தின் சிம்மாசலம் கோவிலில் புதிதாக கட்டப்பட்ட சுவர் இடிந்து விழுந்ததில் 7 பக்தர்கள் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் உள்ளது சிம்மாசலம் கோவில். இங்கு சந்தனோத்சவம் திருவிழாவையொட்டி புதன்கிழமை அதிகாலையில் இருந்தே தரிசனதுக்காக பக்தர்கள் குவிந்திருந்தனர். அப்போது, ரூ.300 கட்டண வரிசையில் பக்தர்கள் நின்றிருந்தபோது, அருகில் இருந்த சுவர் திடீரென இடிந்து விழுந்தது. புதிதாக கட்டப்பட்டு 20 நாட்களே ஆன அந்த 20 அடி சுவர் இடிந்து விழுந்ததில், வரிசையில் நின்றிருந்த பக்தர்கள் பலரும் இடிபாடுகளில் சிக்கினர். இதில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயமடைந்த பலரும் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தக் கட்டிட விபத்து குறித்து தகவல் அறிந்த சில நிமிடங்களில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர், மாநில பேரிடர் மீட்புப் படையினர், காவல் துறை மற்றும் தீயணைப்பு படையினர் இணைந்து இடிபாடுகளில் சிக்கிய மக்களை மீட்கும் பணியை தொடங்கினர். இதில் பலர் மீட்கப்பட்டனர். பலத்த காற்று வீசியதில், புதிதாக கட்டப்பட்ட கோவில் சுவர் இடிந்து விழுந்ததாகவும், அந்தச் சுவர் பலவீனமான அடித்தளத்தைக் கொண்டிருந்ததாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

### ஈரானில் உளவு பார்த்ததாக குற்றச்சாட்டு:
# இஸ்ரேலியருக்கு மரண தண்டனை

**ஈரான், மே 01-**

ஈரான் நாட்டில் இஸ்ரேல் புலனாய்வுப் பிரிவுக்காக உளவு பார்த்தாகக் குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் புலனாய்வுப் பிரிவான மொஸாத் அமைப்பின் மூத்த உளவாளியாகக் கருதப்பட்டவர் மொஹ்சென் லங்கார்நெஷின். இவர், கடந்த 2022-ம் ஆண்டு ஈரானின் ராணுவ அதிகாரி கலோனெல் ஹசன் சையத் என்பவரின் படுகொலைக்கு உதவியதாகக் கூறி கைது செய்யப்பட்டார். இந்நிலையில், அந்நாட்டு நீதிமன்றத்தில் விசாரணையின் போது மொஹ்சென் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். இதனால், அவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையானது நேற்று (ஏப்.30) நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, மொஹசென் கடந்த 2020-ம் ஆண்டு மொஸாத் அமைப்பினால் பணியில் சேர்க்கப்பட்டதாகவும், நேபாளம் மற்றும் ஜார்ஜியா ஆகிய நாடுகளில் இஸ்ரேலிய புலனாய்வுத் துறை அதிகாரிகளை அவர் சந்தித்ததாகவும் கூறப்படுகிறது. கடந்த 2022-ம் ஆண்டு ஈரானின் முக்கிய ராணுவ அதிகாரியான கலோனெல். ஹசன் சையத் அவரது வீட்டின் அருகில் அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டது அந்நாட்டில் மிகப் பெரியளவில் அதிர்வலைகளை உண்டாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரூ.1.67 கோடி ஜி.எஸ்.டி. வரி செலுத்த நோட்டீஸ்: கூலித்தொழிலாளி அதிர்ச்சி

**வேலூர், மே 01-**

வேலூரில் ரூ. 1.67 கோடி ஜி.எஸ்.டி. வரி செலுத்தக் கோரி கூலித்தொழிலாளிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே வெள்ளேரி கிராமத்தை சேர்ந்தவர் 100 நாள் திட்டத்தில் (மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்) வேலை செய்து வருகிறார். இந்நிலையில், ஜி.எஸ்.டி. அலுவலகத்தில் இருந்து அவருக்கு நோட்டீஸ் ஒன்று வந்துள்ளது. அதில், நீங்கள் 1 கோடியே 67 லட்ச ரூபாய் ஜி.எஸ்.டி. வரி செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

சென்னையை சேர்ந்த நிறுவனம் ஒன்றின் பெயரில் ஜி.எஸ்.டி பதிவு செய்துள்ளீர்கள். உரிய வரி செலுத்தாததால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இதை கண்டு அதிர்ச்சியடைந்த கூலித்தொழிலாளி தனது, பான் கணக்கு எண் மூலம் மோசடி நடந்துள்ளதாக புகார் அளித்துள்ளார். இது தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். கூலித்தொழிலாளிக்கு ரூ.1.67 கோடி ஜி.எஸ்.டி. வரி செலுத்தக்கோரி நோட்டீஸ் வந்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஸ்வீடன் நாட்டில் சாலையில் சென்ற மக்கள் மீது துப்பாக்கி சூடு; 3 பேர் பலி

**உப்சலா, மே 01-**

ஸ்வீடனில் மக்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

உப்சலா நகரத்தில் வக்சலா சதுக்கத்தின் அருகில் கடந்த ஏப்.29 ஆம் தேதியன்று அடையாளம் தெரியாத மர்ம நபர் ஒருவர் அங்கிருந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளார். இந்தத் தாக்குதலில் ஏராளமானோர் படுகாயமடைந்த நிலையில் 3 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட விசாரணையில் சந்தேகத்தின் அடிப்படையில் 16 வயது சிறுவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். முன்னதாக, ஸ்வீடன் நாட்டில் குற்றவாளி கும்பல்களின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. இருப்பினும், ஐரோப்பிய ஒன்றியத்தின் வரையறைகளின்படி அந்நாட்டில் துப்பாக்கி உரிமையாளர்கள் அனைவரும் கட்டாயம் லைசன்ஸ் பெற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி மாதம் ஸ்வீடனின் ஒரிப்ரோ நகரத்தில் செயல்பட்டு வந்த கல்வி நிறுவனத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.



சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அலுவலகத்தில் திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர் நாகநாதன்-ஜமதக்னி சாந்தி தம்பதியர் தங்களது 50-வது திருமண நாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்து பெற்றதோடு, விடுதலை போராட்ட வீரர் க.ரா.ஜமதக்னி அவர்களுக்கு தமிழக அரசு சார்பில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் நினைவுத்தூண் அமைக்கப்படும் என்று சட்டமன்ற பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் எழிலன் எம்.எல்.ஏ. உள்ளார்.

# வங்கி ஏ.டி.எம். கார்டு பயன்பாட்டுக்கு கூடுதல் கட்டணம் இன்று முதல் அமல்

**சென்னை, மே. 01-**

ஏ.டி.எம். கார்டு பயன்பாட்டுக்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வங்கிகளும் தங்கள் ஏ.டி.எம்.களில் பணம் எடுக்கும்போது வெவ்வேறு நடைமுறைகளை பின்பற்றுகின்றன. ஒரு சில வங்கிகள் நாள் ஒன்றுக்கு ரூ.40 ஆயிரமும், சில வங்கிகள் ரூ.50 ஆயிரமும் எடுக்க அனுமதி வழங்கியுள்ளன. ஏ.டி.எம். கார்டுகளின் வகைப்பாட்டினை பொறுத்து இந்த வேறுபாடு உள்ளது. ஒரு மாதத்திற்கு 5 முறை ஏ.டி.எம். கார்டை பயன்படுத்தி பணமோ, இதர வசதிகளையோ இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என்று ரிசர்வ் வங்கி அறிவித்திருந்தது. அதற்கு மேல் பணம் எடுத்தால், ஒவ்வொரு முறைக்கும் தற்போது ரூ.21 சேவை கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த கட்டணம் இன்று (மே 1) முதல் ரூ.23 ஆக உயர்த்தப்பட இருப்பதாக ஏற்கனவே ரிசர்வ் வங்கி அறிவித்து இருக்கிறது.

அதன் அடிப்படையில், இன்று முதல் தங்கள் வாடிக்கையாளர்களிடம் கூடுதல் சேவை கட்டணத்தை வசூலிக்க வங்கிகள் தயாராகி வருகின்றன. ஆனால், ஏ.டி.எம். கார்டு பயன்பாட்டுக்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று வாடிக்கையாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர் என்றாலும், இன்று முதல் இந்த நடைமுறை அமலுக்கு வருகிறது. இதனால், வாடிக்கையாளர்கள் உஷாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# பிரதமர் மோடியின் ரஷ்ய பயணம் ரத்து

**டெல்லி, மே 01-**

பஹல்காம் தாக்குதலால் இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் ரஷ்ய பயணத்தை பிரதமர் மோடி ரத்து செய்துள்ளார்.

2ம் உலகப்போரில் ஜெர்மனியை ரஷ்யா வென்றது. இதை வெற்றி தினமாக ரஷ்யா ஆண்டுதோறும் மே 9ம் தேதி கொண்டாடி வருகிறது. அந்த வகையில் 80-ம் ஆண்டு வெற்றி தின கொண்டாட்டம் வரும் 9ம் தேதி நடைபெறுகிறது. இதில், ராணுவ அணிவகுப்பு நடத்தப்பட உள்ளது. அதிபர் புதின் இந்த வெற்றி தின கொண்டாட்டத்தில் கலந்து கொள்கிறார். மேலும், இந்த வெற்றி தின கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள இந்திய பிரதமர் மோடி, சீன அதிபர் ஜி ஜின்பிங் ஆகியோருக்கு புதின் அழைப்பு விடுத்தார். இதையடுத்து, பிரதமர் மோடி ரஷ்யா பயணம் மேற்கொள்வார் என தகவல் வெளியானது. இந்நிலையில், ரஷ்ய பயணத்தை பிரதமர் மோடி ரத்து செய்துள்ளார். பஹல்காம் தாக்குதலால் இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் பிரதமர் மோடி ரஷ்ய பயணத்தை ரத்து செய்துள்ளார். பிரதமர் மோடிக்கு பதில் இந்திய சார்பில் பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் ரஷ்யா செல்ல உள்ளார். அவர் வெற்றி தின கொண்டாட்டத்தில் கலந்துகொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சாதிவாரி கணக்கெடுப்பு:

# மத்திய அரசின் அறிவிப்புக்கு எடப்பாடி பழனிசாமி வரவேற்பு

**சென்னை, மே 01-**

சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்படும் என அறிவித்த பிரதமர் மோடிக்கு வாழ்த்துகள் என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இந்தியாவில் கடைசியாக 1931ம் ஆண்டு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன் பின்னர், 2011ம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் சாதி விவரமும் சேர்க்கப்பட்டது. ஆனால், அதன் தரவுகள் வெளியிடப்படவில்லை. 2021ல் நடத்தப்பட வேண்டிய மக்கள்தொகை கணக்கெடுப்பு கொரோனாவால் தள்ளிப்போன நிலையில், இனி நடத்தப்பட உள்ள அந்த கணக்கெடுப்பில் சாதி விவரமும் சேர்க்கப்படும் என மத்திய அரசு தற்போது அறிவித்துள்ளது. காங்கிரஸ், திமுக, பாமக உள்ளிட்ட கட்சிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்றுள்ளது மத்திய அரசு. இந்நிலையில், சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்படும் என அறிவித்த மத்திய அரசுக்கு தமிழக எதிர்க்கட்சி தலைவரும் அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி வரவேற்பு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் எக்ஸ் தள பதிவில் கூறியதாவது:- தமிழ்நாடு மக்கள் பல ஆண்டுகளாக மத்திய அரசிடம் சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தனர். ஏற்கனவே முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அரசு இருக்கும்பொழுது, தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டபிறகு வந்த திமுக அரசு அதை கைவிட்டுவிட்டது.

தற்போது மத்திய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்பின்போதே சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். சுமார் 93 ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய அரசால் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படுவதை மனதார வரவேற்கிறேன். ஜாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்படும் அறிவித்த இந்தியப் பிரதமர் மோடி, அமித்ஷா அவர்களுக்கும் அதிமுக சார்பில் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என பதிவிட்டுள்ளார்.

### தனியார் பள்ளியில் சிறுமி உயிரிழந்த விவகாரம்:

# தாளாளர், உதவியாளருக்கு 15 நாட்கள் நீதிமன்ற காவல்

**மதுரை, மே 01-**

மதுரையில் தனியார் பள்ளியில் 4 வயது சிறுமி உயிரிழந்த விவகாரத்தில் பள்ளியின் தாளாளர், உதவியாளருக்கு 15 நாட்கள் நீதிமன்ற காவல் விதிக்கப்பட்டுள்ளது.

மதுரை கே.கே.நகரில் மழலையர் பள்ளியின் குடிநீர் தொட்டியில் 4 வயது சிறுமி விழுந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பாக பள்ளியின் தாளாளர் திவ்யா ராஜேஷ் மற்றும் உதவியாளர் வைரமணி ஆகிய இருவரையும் அண்ணா நகர் போலீசார் கைது செய்து 15 நாட்கள் நீதிமன்றக் காவலில் மதுரை மத்திய சிறையில் அடைத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக போலீசார், ஆர்.டி.ஓ., மாவட்ட கல்வி அலுவலர் ஆகியோர் நேரில் ஆய்வு நடத்தி, விசாரணையில் விதிமீறல் கண்டறியப்பட்டு பள்ளிக்கு சீல் வைத்துள்ளனர்.

# இளைஞரணி செயலாளராக விஜய பிரபாகர் நியமனம்

### தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா அறிவிப்பு

**சென்னை, மே 01-**

தே.மு.தி.க. இளைஞரணி செயலாளராக விஜய பிரபாகர் நியமிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா வெளியிட்டுள்ள அறிகையில், "தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின், இளைஞர் அணி செயலாளராக வி.விஜய பிரபாகர், நேற்று (ஏப்.30) முதல் நியமிக்கப்படுகிறார். அவருக்கு கழக நிர்வாகிகள், மாவட்டம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர், வார்டு, ஊராட்சி, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தொண்டர்கள் என அனைவரும் முழு ஒத்துழைப்பு தந்து தே.மு.தி.க. திராவிடகழகம் வளர்ச்சி பெற பாடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த பிரேமலதா, ஜனவரி 9-ல் கடலூரில் தே.மு.தி.க. மாநாடு நடைபெறும் என்றார். மேலும், கூட்டணி குறித்து தேர்ந்தல் நெருங்கும்போது முடிவெடுக்கப்படும் என்று கூறினார்.

முன்னதாக, தே.மு.தி.க. - தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் நேற்று தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, வெள்ளிச்சந்தையில் நடைபெற்றது. இதில், தலைமைக் கழக நிர்வாகிகள் ஒருமனதாக தேர்வு செய்து பதவி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, கட்சியின் பொதுச் செயலாளராக பிரேமலதா விஜயகாந்த் தொடர்கிறார். வி. இளங்கோவன் அவைத் தலைவராகவும், எல்.கே.சுதீஷ் பொருளாளராகவும், ப.பார்த்தசாரதி தலைமை நிலையச் செயலாளராகவும், அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் கொள்கை பரப்புச் செயலாளராகவும், எம். ஆர்.பன்னீர்செல்வம், சந்திரன், செந்தில்குமார் ஆகியோர் துணைச் செயலாளர்களாகவும் அறிவிக்கப்பட்டனர்.

### தமிழக வெற்றிக்கழகம் சார்பில்

# ஒழுங்கு நடவடிக்கைக்குழு அமைத்து விஜய் உத்தரவு

**சென்னை, மே 01-**

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் ஒழுங்கு நடவடிக்கைக் குழு அமைத்து அக்கட்சியின் தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளார். அதன்படி தலைமை ஒழுங்கு நடவடிக்கைக் குழு மற்றும் மண்டல ஒழுங்கு நடவடிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கட்சியின் கொள்கை குறிக்கோளுக்கு எதிராக செயல்படுவோர் மீது அக்குழு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவில் இருவர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மண்டலம், மேற்கு மண்டலம், தெற்கு மண்டலம், மத்திய/கிழக்கு மண்டலம் என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு மண்டலத்துக்கு நான்கு பேர் வீதம் 16 பேர் மண்டல ஒழுங்கு நடவடிக்கைக் குழு நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:- கழக விதிகளின்படி, தமிழக வெற்றிக் கழகத் தலைவரே, தலைமை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் தலைவர் ஆவார். இதன்படி, பின்வரும் தோழர்களை, கழகத் தலைமை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் உறுப்பினர்களாக நியமனம் செய்கிறேன். உறுப்பினர் 1. என். ஆனந்த், கழகப் பொதுச் செயலாளர், உறுப்பினர் 2. திருமதி சி.விஜயலட்சுமி, மாநிலச் செயலாளர், உறுப்பினர் சேர்க்கை அணி.

இக்குழுவானது, கழகத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள நிர்வாகிகளும் தோழர்களும் கழகக் கட்டுப்பாட்டை மீறி, கொள்கைகள், கோட்பாடுகள், குறிக்கோள்களுக்கு எதிராகச் செயல்பட்டால் அவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்குழுவிற்குக் கழக நிர்வாகிகளும், தோழர்களும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கழக நிர்வாக வசதிக்காகத் தமிழ்நாட்டில் உள்ள வருவாய் மாவட்டங்கள் வடக்கு, மேற்கு, தெற்கு மற்றும் மத்திய /கிழக்கு என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி இந்த நான்கு மண்டலங்களில் உள்ள வருவாய் மாவட்டங்களுக்குட்பட்ட கழக மாவட்டங்களுக்கு மண்டல ஒழுங்கு நடவடிக்கைக் குழுக்கள் நியமிக்கப்படுகின்றன.

இந்த ஒழுங்கு நடவடிக்கைக் குழுக்கள் தங்களுக்குரிய மண்டலங்களில் கழக நிர்வாகிகளும் தோழர்களும் கழகக் கட்டுப்பாட்டை மீறி, கொள்கைகள், கோட்பாடுகள், குறிக்கோள்களுக்கு எதிராகச் செயல்பட்டால், அவர்கள் மீது கழக விதிகளின்படி உரிய நடவடிக்கைகளை, தலைமை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் வழிகாட்டுதல் மற்றும் அனுமதியின் பேரில் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்குழுக்களுக்குக் கழக நிர்வாகிகளும் தோழர்களும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

### ஆந்திராவில் கோவில் சுவர் இடிந்து

# உயிரிழந்த 9 பேர் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி நிவாரணம் அறிவிப்பு

**புதுடெல்லி, மே 01**

கோவில் சுவர் இடிந்து 9 பேர் பலியான விவகாரத்தில் மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். மேலும் நிவாரணம் அறிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் சிம்மாசலத்தில் உள்ள ஸ்ரீ வராஹ லட்சுமி நரசிம்ம கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலுக்கு முதல் தரிசனத்திற்காக அதிகாலையில் பல பக்தர்கள் வந்திருந்தனர். அதிகாலை 2.30 மணியளவில் பலத்த மழை பெய்ததால் சுவர் இடிந்து விழுந்ததில் 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் தெரிவித்திருப்பதாவது:- ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் சுவர் இடிந்து விழுந்ததில் ஏற்பட்ட உயிரிழப்பு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு எனது இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையட்டும். இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூ. 2 லட்சம் நிவாரண தொகை வழங்கப்படும். காயமடைந்தவர்களுக்கு ரூ. 50,000 வழங்கப்படும். என தெரிவித்துள்ளார்.

# தேசிய பாதுகாப்பு ஆலோசனை குழுவுக்கு புதிய அதிகாரிகள் நியமனம்: மத்திய அரசு

**புதுடெல்லி, மே. 01-**

தேசிய பாதுகாப்பு ஆலோசனை குழுவுக்கு புதிய அதிகாரிகளை நியமனம் மத்திய அரசு உத்தரவிட்டது.



ஜம்மு காஷ்மீரில் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய கோர தாக்குதலில் 26 அப்பாவி சுற்றுலா பயணிகள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு, நேற்று முதல் முறையாக பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இதன்படி நேற்று காலை 11 மணிக்கு தொடங்கிய இந்த கூட்டத்தில் மத்திய மந்திரிகளான ராஜ்நாத் சிங், அமித்ஷா, நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில் பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பது தொடர்பாக முக்கிய முடிவு எடுக்கப்படும் என தகவல் வெளியாகி இருந்தது. இந்நிலையில் தேசிய பாதுகாப்பு ஆலோசனை குழுவுக்கு புதிய அதிகாரிகளை நியமனம் செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு ஆலோசனை குழு தலைவராக முன்னாள் 'ரா' தலைவர் அலோக் ஜோஷி நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதன்படி ராணுவ சேவைகளில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகளான முன்னாள் மேற்கு விமானப்படை தளபதி ஏர் மார்ஷல் பி.எம். சின்ஹா, முன்னாள் தெற்கு ராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ.கே. சிங் மற்றும் ரியர் அட்மிரல் மோன்டி கன்னா ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர். மேலும் இந்திய காவல் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற இரண்டு உறுப்பினர்களான ராஜீவ் ரஞ்சன் வர்மா மற்றும் மன்மோகன் சிங் ஆகியோரும், முன்னாள் இந்திய வெளியுறவு சேவை தூதர் பி. வெங்கடேஷ் வர்மாஆகியோரும் 7 பேர் கொண்ட குழுவில் இடம்பெற்றுள்ளனர். இதனிடையே அடுத்த 36 மணி நேரத்தில் இந்தியா தாக்குதலை தொடங்கும் என பாகிஸ்தான் அரசை அந்நாட்டு உளவுத்துறை எச்சரித்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### தென்னிந்திய நடிகர் சங்க நிர்வாகிகள்

# பதவிக்கால நீட்டிப்பை எதிர்த்த வழக்கில் பதிலளிக்க உத்தரவு

**சென்னை, மே 01-**

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தற்போதைய நிர்வாகிகளின் பதவிக்காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை செல்லாது என அறிவிக்கக் கோரிய வழக்கில், தென்னிந்திய நடிகர் சங்கம் மற்றும் அதன் நிர்வாகிகள் ஜூன் 4-ம் தேதிக்குள் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தென்னிந்திய நடிகர் சங்க சட்ட திட்டத்தின்படி, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்பட வேண்டும். கடந்த 2022 -ம் ஆண்டு நடந்த தேர்தலில் தலைவராக நடிகர் நாசர், பொதுச் செயலாளராக நடிகர் விஷால், பொருளாளராக நடிகர் கார்த்தி, துணைத் தலைவர்களாக பூச்சி முருகன் மற்றும் நடிகர் கருணாஸ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் கடந்த 2024-ம் ஆண்டு செப்டம்பர் 8-ம் தேதி நடந்த நடிகர் சங்க பொதுக்குழு கூட்டத்தில், நடிகர் சங்கத்துக்கு புதிய கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதாக கூறி, நடிகர் சங்க நிர்வாகிகளின் பதவிக்காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தை செல்லாது என்றும் சட்ட விரோதமானது என்றும் அறிவிக்க கோரி நம்பிராஜன் என்ற உறுப்பினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், "கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த பொதுக்குழு கூட்டத்திற்கான அழைப்பிதழில், நிர்வாகிகளின் பதவிக்காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பது குறித்த எந்த குறிப்பும் இடம்பெறவில்லை. நடிகர் சங்க கட்டிட பணிகளை சுட்டிக்காட்டி பதவி காலத்தை நீட்டிக்க முடியாது.

புதிய நிர்வாகிகள் கட்டுமான பணிகளை தொடர்வார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, பதவி காலத்தை நீட்டித்தது சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கும், தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டத்திற்கும் விரோதமானது.

நிர்வாகிகளின் பதவி காலத்தை நீட்டித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை செல்லாது என அறிவிக்க வேண்டும். உயர் நீதிமன்ற நீதிபதியை ஆணையராக நியமித்து தேர்தல் நடத்த உத்தரவிட வேண்டும். தேர்தல் நடத்தும் வரை தற்போதைய நிர்வாக குழு மற்றும் செயற்குழு உள்ளிட்ட நிர்வாகிகள் எந்த முடிவும் எடுக்க தடை விதிக்க வேண்டும்,"

என மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த மனு நீதிபதி கே. குமரேஷ் பாபு முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, தென்னிந்திய நடிகர் சங்கம், அதன் தலைவர் நாசர், பொதுச் செயலாளர் விஷால், பொருளாளர் கார்த்தி ஆகியோர் ஜூன் 4-ம் தேதிக்குள் பதில் அளிக்க உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்தார்.

### மாஞ்சோலை தேயிலை

# தொழிலாளர்களுக்கு விலையின்றி வீடு வழங்க அரசாணை வெளியீடு

**நெல்லை, மே 01-**

மாஞ்சோலை தொழிலாளர்களுக்கு அரசு சார்பில் அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்த நிலையில் மாஞ்சோலை தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு விலையின்றி வீடு வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், களக்காடு முண்டந்துறை புலிகள் சரணாலய பகுதிக்குட்பட்ட மாஞ்சோலை பி.பி.டி.சி. தேயிலை நிறுவனத்தின் செயல்பாடுகள் முடிவுற்றதால், அங்கு பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு அரசு சார்பில் அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அதன்படி, தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் வாழ்வாதாரத்திற்கான அனைத்து உதவிகளும் பணியிழந்த தொழிலாளர்களுக்கு வீட்டுமனை மற்றும் வீடுகள், வாழ்வாதாரத்திற்கான உதவிகள் உள்ளிட்டவற்றை வழங்கிட முதல்வர் உத்தரவிட்டு இருந்தார். இந்த நிலையில், மாஞ்சோலை தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு விலையின்றி வீடு வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 20 அடுக்குமாடி குடியிருப்புகளை விலையின்றி வழங்க ரூ.59.55 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டு தயார் நிலையிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ரூ.11.54 லட்சம் மதிப்புள்ள ஒரு வீட்டிற்கு பயனாளிகள் தொகையான சுமார் ரூ.3 லட்சத்தை அரசே செலுத்த நிதி ஒதுக்கீடு செய்து சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை சார்பில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# பாகிஸ்தானுக்கு ஆதரவாக யார் பேசினாலும் தவறுதான்: கர்நாடக முதல்வர் திட்டவட்டம்

**பெங்களூரு, மே 01-**

பாகிஸ்தானுக்கு ஆதரவாக பேசுவது தேச துரோகத்திற்கு சமம் என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா தெரிவித்துள்ளார். கர்நாடக மாநிலம் தட்சிண கன்னடா மாவட்டம் குடுபு கிராமத்தில் கடந்த 27ம் தேதி உள்ளூர் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில், அப்பகுதியை சேர்ந்த 30க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். ஆட்டத்தின்போது மைதானத்தில் ஒருநபர் 'பாகிஸ்தான் வாழ்க' என கோஷம் எழுப்பினார். இதனால் ஆத்திரமடைந்த அங்கிருந்தவர்கள் அந்த நபர் மீது சரமாரி தாக்குதல் நடத்தினர். கற்கள், கட்டைகளை கொண்டு அந்த நபரை சரமாரியாக அடித்தனர். இதில் அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து சச்சின் என்ற நபர் உள்பட 20 பேரை கைது செய்தனர். மேலும், 10 பேரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். தாக்குதலில் உயிரிழந்தது கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் புல்பல்லி கிராமத்தை சேர்ந்த அஷ்ரப் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் அபகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் வாழ்க என்று கோஷம் எழுப்பிய நபர் அடித்துக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கர்நாடக முதல்வர் சித்தராமையாவிடம் நேற்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த சித்தராமையா கூறுகையில், குடுபு கிராமத்தில் நபர் அடித்துக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. பாகிஸ்தான் வாழ்க என கோஷம் எழுப்பப்பட்டிருந்தால் யாராக இருந்தாலும் அது மிகவும் தவறான ஒன்று. பாகிஸ்தானுக்கு ஆதரவாக யார் பேசினாலும் தவறு. அவ்வாறு பேசுவது தேச துரோகத்திற்கு சமம்' என்றார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



ஆசிரியர் தேர்வு மையத்தில் உள்ள அனைத்து இடைநிலை ஆசிரியப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்புவதோடு, ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமனம் வழங்கி அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியத்தையும் வழங்க தமிழக அரசு வழிவகை செய்ய வேண்டும்.

**- நயினார் நாகேந்திரன்**



காவல்துறையில் பணியாற்றுபவர்களும் நம்மைப்போல உயிரும், உணர்வும், ரத்தமும் சதையும் கொண்ட சக மனிதர்கள்தான். தமிழ்நாடு காவலர்களும் தங்களுடைய நியாயமான கோரிக்கையை ஒரு மித்த குரலில் அரசிடம் முன் வைத்து உரிமைகளைப் பெறுவதற்கு வாய்ப்பாக ஊழியர் சங்கம் அமைக்க தமிழ்நாடு அரசு அனுமதிக்க வேண்டும்.

**- சீமான்**



காஷ்மீர் நமது நாட்டின் ஓர் அங்கம். ஆனால், ஓட்டுக்காக அரசியல் நாடகம் ஆடக்கூடாது. அந்த தீவிரவாதிகளுக்கும், அவர்களை ஊக்குவித்த பாகிஸ்தான் நாட்டுக்கும் இங்கு ஆதரவாக பேசுவது மிகவும் தவறு. நாங்கள் அப்படித்தான் பேசுவோம் என்று கூறுபவர்கள் அந்த நாட்டுக்கே சென்றுவிடுங்கள்.

**- பவன் கல்யாண்**



தமிழகத்தில் பின்தங்கிய சமூகத்தினருக்கு, அவரவர் சமூகத்துக்கு ஏற்ப இடஒதுக்கீடு, கல்வி, வேலை வாய்ப்பு, அரசு திட்டங்கள் அனைத்தும் கிடைக்க வேண்டும். எனவே தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பை விரைந்து நடத்த வேண்டும். தமிழகத்தில் பின் தங்கியுள்ள 20 மாவட்டங்களை வளர்ச்சியடைய செய்ய வேண்டும்.

**- அன்புமணி**

thinaboomi.com தினபூமி, வேலூர் மே 01, 2025

# ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் கால்வாய்கள் ரூ.95 கோடியில் சீரமைக்க முடிவு- சென்னை மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம்



**சென்னை மே 01-**
சென்னை மாநகராட்சி மன்ற கூட்டம் மேயர் ஆர். பிரியா தலைமையில் இன்று நடந்தது. துணைமேயர் மகேஷ்குமார், கமிஷனர் குமரகுருபரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டம் தொடங்கியதும் கேள்வி நேரத்தில், மண்டல தலைவர் நேதாஜி கணேசன் பேசும்போது, நேதாஜி நகர், 1, 2 மற்றும் மெயின் தொகுதிகளில் மழைக் காலங்களில் மழைநீர் தேங்கி பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதனால் அங்கு விரைவாக மழைநீர் கால்வாய் அமைக்க வேண்டும். வடசென்னை பகுதியில் 4 மேம்பால பணிகள் நடக்கிறது.இந்த பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். கொருக்குபேட்டை மேம்பாலப் பணியை விரைவில் தொடங்க வேண்டும் என்றார்.

138 வது வார்டு திமுக மாமன்ற உறுப்பினர் கண்ணன் பேசிய போதுசென்னை மாநகராட்சியில் வட மாநிலத்தைச் சேர்ந்த பலருக்கு வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறது!

அவர்களுக்கு சென்னையிலும், அவர்கள் சொந்த ஊரிலும் வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இதனை தேர்தல் அதிகாரியாக உள்ள சென்னை மாநகராட்சி ஆணையர் கண்காணிக்க வேண்டும்'' இவ்வாறு அவர் கூறினார்.

கவுன்சிலர் கதிர் முருகன் (அ.தி.மு.க.) கூறும் போது :-குழந்தைகள் பிறப்பு சான்றிதழில் பிழைகள் இருப்பதால் பள்ளியில் சேர்ப்பதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. இவற்றை சரி செய்ய சிறப்பு முகாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார்.அதற்கு மேயர் பிரியா பதிலளிக்கையில், மருத்துவ முகாம் நடத்துகின்றபோது அதனுடன் சேர்ந்து பிறப்பு - இறப்பு சான்றிதழ் திருத்தம் செய்வதற்கான முகாம் நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்றார்.

பின்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:- சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் கட்டுமானத்திற்கான வரைவு வழிகாட்டுதல் வெளியிடப்பட்டு உள்ளது. காற்று மாசுபாட்டை குறைப்பதற்காக கட்டிட கட்டுமானப் பணிகளுக்கு இந்த வழிகாட்டுதல்கள் பரிந்துரைக்கப்படுகிறது.ஒரு ஏக்கர் வரை பரப்பளவு கொண்ட திட்டங்களில் வெளிப்புற இடங்களில் தூசி, குப்பைகள் பரவுவதை தடுக்க தகரம், உலோக தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும்.புதிய கட்டுமானம் அல்லது இடிக்கப்படும் அனைத்து கட்டமைப்புகளில் இருந்து வெளிவரும் தூசி, துகள்கள் பரவுவதை தடுக்க துணி, தார்ப்பாய், பச்சை வலையால் மூடப்பட்டு இருக்க வேண்டும்.சென்னை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு விரைவில் 120 மருத்துவர்கள் பணியமர்த்தப்பட உள்ளனர் என மேயர் பிரியா தெரிவித்துள்ளார். ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு காலதாமதமாக வருகை புரியும் மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். இதே போல் 237 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.





சென்னை தங்கசாலை சிவசுப்பிரமணியர் சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா நேற்று நடைபெற்றது. இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளிட்டஏராளமானோர் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் கஞ்சா பறிமுதல்

**சென்னை மே 01-**
சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் ரூ. 2.5 லட்சம் கஞ்சாவை பறிமுதல் செய்த ரெயில்வே பாதுகாப்பு படை போலீசார் ஆசாம் வாலிபர்கள் 2 பேரை கைது செய்தனர்.

சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தின் 4வது நடைமேடைக்கு வந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ் வருகையை கவனித்து கொண்டிருந்த சென்னை சென்ட்ரல் ரெயில் நிலைய ரெயில்வே பாதுகாப்புப்படை காவல் துறை ஆய்வாளர் டி. மதுசூதன் ரெட்டி மற்றும் குழுவினர் அடங்கிய விழிப்புணர்வு குழுவினர் சந்தேகத்திற்கிடமான வகையில் வந்த 2 வேரை நிறுத்தி அவர்கள் கொண்டுவந்த பையை சோதனை செய்தனர். வர்கள்டம் இருந்து 5.0 கிலோகிராம் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது. இதன் சந்தை மதிப்பு ரூ. 2,50,000 ஆகும்.இதைத் தொடர்ந்து அசாம் மாநிலத்தைச் சேர்ந்த குர்ச்சித் அலி (வயது 23), சுர் ஜமான் (வயது 23) ஆகிய 2 பேரை மடக்கிப்பிடித்து கைது செய்தனர். மேலும் சட்ட நடவடிக்கைகளுக்காக அவர்களை தமிழ்நாடு காவல் துறையினரிடம் ஒப்படைத்தனர்.போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் ரெயில்வே பாதுகாப்புப் படை மற்றும் அதனுடன் தொடர்புடைய குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் சென்னை சென்ட்ரல் ரெயில் நிலைய ரெயில்வே பாதுகாப்புப்படை இன்ஸ்பெக்டர் மதுசூதன் ரெட்டி மேற்பார்வையில் நடத்தப்பட்ட சோதனையின் போது, ராஜஸ்தானைச் சேர்ந்த வீர ராம் (வயது 23) என்பவர் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரெயிலில் கியாஸ் சிலிண்டர் கொண்டு வந்ததை ரெயில்வே பாதுகாப்புப் படை போலீசார் கண்டு பிடித்து அவரை கைது செய்து கியாஸ் சிலிண்டரை பறிமுதல் செய்தனர். அவர் மீது ரெயில்வே சட்டத்தின் பிரிவு 164 இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

# வேளாண்மை கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுடன் கரும்பு நடவு பணியில் ஈடுபட்டனர்



**புதுக்கோட்டை மே 1**
புதுக்கோட்டை மாவட்டம்கந்தர்வகோட்டை அருகே விரடிபட்டி கிராமத்தில் திருவரங்குளம் தனியார் வேளாண்மை அறிவியல் கல்லூரியில் இறுதியாண்டு இளங்கலை வேளாண் அறிவியல் மாணவர்கள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் விவசாயிகளுடன் தங்கி கரும்பு நடவு பணி செய்தனர்.

தனியார் கல்லூரியின் குழு ஒருங்கிணைப்பாளர்கள் திருமால்கண்ணன், வேளாண் விரிவாக்கத்துறை சேர்ந்த வினோதா, ஆகியோரின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையின்படி தனியார் வேளாண்மை அறிவியல் கல்லூரியில் இறுதியாண்டு இளங்கலை வேளாண் அறிவியல் மாணவர்கள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ், விவசாயிகள் கரும்பு நடவு பணி செய்துக் கொண்டிருந்தபோது மாணவர்களும் ஆர்வத்துடன் விவசாயிகளுடன் சேர்ந்து கரும்பு நடவு பணியில் ஈடுபட்டனர்.மேலும் இது குறித்து அப்பகுதி விவசாயிகள் கூறிவதாவது சாகுபடி செலவுகளை விட லாபம் கிடைக்கும் என்றும் கூறினார்கள்.இதன் மூலம் கரும்பு நடவு முதல் அறுவடை வரை மாணவர்கள் தெரிந்து கொண்டனர்.நடவு செய்யும் நடைமுறைகள் மற்றும் உரம் தெளித்தல் ,நீர்ப்பாசன முறைகளையும் தெரிந்து கொண்டனர்

# டி.பி சத்திரம் பகுதியில் மனைவிக்கு கத்தி குத்து: கணவர் கைது

**சென்னை மே 01-**
சென்னை, டி.பி சத்திரம், காமராஜர் நகர், 10வது குறுக்குத் தெருவில் வசித்து வரும் அனிதா, என்பவர் தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். கடந்த சில நாட்களுக்கு முன்னர் அனிதாவின் கணவர் ரஞ்சித்குமார், மேற்படி அனிதா மற்றொரு நபருடன் தகாத உறவில் இருப்பதாக கூறி, வீட்டில் தகராறு செய்து வந்துள்ளார். இந்நிலையில் நேற்று முன் தினம் அனிதா மேற்படி வீட்டில் இருக்கும் போது ரஞ்சித்குமார் மீண்டும் தகராறு செய்து, தகாத வார்த்தைகள் பேசி, அனிதாவை காய்கறி வெட்டும் கத்தியால் தாக்கியுள்ளார். சத்தம் கேட்டு, அருகிலிருந்தவர் மேற்படி அனிதாவை மீட்டு, கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்து, உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து அனிதா கொடுத்த புகாரின்பேரில், டி.பி சத்திரம் காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

டி.பிசத்திரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி ரஞ்சித்குமார் (எ) பெலிக்ஸ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி ரஞ்சித்குமார் (எ) பெலிக்ஸ் மீது ஏற்கனவே 1 கொலை வழக்கு உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி ரஞ்சித்குமார் (எ) பெலிக்ஸ் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# விதிமீறல் கட்டிடங்களுக்கு ரூ.5 லட்சம் வரை அபராதம் - சென்னை மாநகராட்சி அதிரடி

**சென்னை மே 01-**
எச்சரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டு 15 நாட்களுக்குள் சரி செய்யாவிட்டால் அபராதத்துடன் கட்டுமான நடவடிக்கைகளை நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும். என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது. சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டம் மேயர் பிரியா தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சுமார் 200-க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

அதில் முக்கியமாக சென்னையில் கட்டுமானப் பணிகள் ஏற்படக் கூடிய காற்று மாசை தணிக்க தவறினால் ரூ.5 லட்சம் வரை அபராதம் விதிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளது.

இதன்படி 20,000 சதுர மீட்டருக்கு அதிகமான பரப்பளவு உள்ள தளங்களில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த வழிகாட்டு விதிமீறலுக்கு ரூ.5 லட்சம் அபராதம் விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதே போல், 500 சதுர மீட்டருக்கு மேல் 20,000 சதுர மீட்டர் வரை பரப்பளவில் அமைந்துள்ள தளங்களில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த வழிகாட்டு விதிமீறலுக்கு ரூ.25,000 அபராதம் விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.விதிமீறல்களை சரிசெய்வதற்கான எச்சரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டு, 15 நாட்கள் அவகாசம் அளிக்கப்படும் எனவும், 15 நாட்களுக்குள் சரி செய்யாவிட்டால், அபராதத்துடன் கட்டுமான நடவடிக்கைகளை நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளது.

# அண்ணா நகரில் சம்பளம் தராததால் காரை திருடிய ஊழியர் கைது

**சென்னை மே 01-**
சென்னை அண்ணா நகரில் பிரபல கார் ஷோரூம் ஒன்று உள்ளது. இங்கு ஊழியராக வேலை பார்த்து வரும் ரமேஷ் என்பவருக்கு, அந்த நிறுவனம் ரூ.50 ஆயிரம் சம்பள பாக்கி வைத்ததாக கூறப்படுகிறது. பலமுறை கேட்டும் சம்பள பாக்கி கிடைக்காததால் விரக்தி அடைந்த ரமேஷ், மாற்றி யோசிக்கத் தொடங்கினார். அப்போது, வாடிக்கையாளர் புதிதாக வாங்கிய கார் ஒன்றுக்கு, ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் பதிவு எண் வாங்குவதற்காக கடைக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்தது. திடீரென அந்த காரை காணவில்லை.உடனடியாக, நிறுவன மேலாளர், புதிய கார் மாயமானது குறித்து அண்ணாநகர் போலீசில் புகார் செய்தார். புகாரின் பேரில் போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். அப்போது, அந்த கார் பக்கத்து தெருவில் சாலையோரம் நிறுத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.யார் காரை இங்கு கொண்டு வந்து நிறுத்தியது என்று போலீசார் விசாரணை நடத்தியபோது, ஷோரூமில் வேலை பார்க்கும் ஊழியரான ரமேஷ் காரை திருடியது தெரியவந்தது. சம்பள பாக்கி ரூ.50 ஆயிரத்தை தராததால் காரை திருடியதாக போலீசாரிடம் அவர் ஒப்புக்கொண்டார். அவரை கைது செய்த போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்


மாண்புமிகு கோட்டாட்சியர் அவர்கள் அரக்கோணம்.
அதிமுசி | /650/2025

உமாசங்கர்
த/பெ முருகேசன்
நெ-172-பிள்ளையார் கோயில் தெரு.
காட்டு பாக்கம் கிராமம் & அஞ்சல்
நெமிலி வட்டம்,
இராணிப் பேட்டை மாவட்டம்
-------மனுதாரர்
----எதிர்----
திருமிகு. வருவாய் கோட்டாச்சியர் அவர்கள், அரக்கோணம்.
-------எதிர் மனுதாரர்

மேலே கண்ட முகவரியில் வசிக்கும் உமாசங்கர் ஆகிய நான் எனது தங்கை S. மலர் ( இவர் கடந்த 05-05-1981ல் பிறந்தார் இவரது பிறப்பு எங்கள் கவனக் குறைவால் எதிர் மனுதாரிடம் பதிவு செய்ய தவறி விட்டோம் எனவே, தங்கை பிறப்பு பதிவு செய்ய உத்தரவளிக்கும்படி கோரி உள்ளேன். எனவே இது குறித்து ஆட்சபேனை உள்ளவர்கள் நேரில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம் தவறினால் ஒருதலை பட்சமாக தீர்மானிக்க பட்டு உத்தரவு பெறப்படும் என அறியவும்.

இப்படிக்கு;
உமாசங்கர்

மாண்புமிகு கோட்டாட்சியர் அவர்கள் அரக்கோணம்.
அதிமுசி 1/629/2025

துளசி
க/பெ கருணாகரன்
நெ - 7 - நேதாஜி நகர்
பனபாக்கம்
நெமிலி வட்டம்,
இராணிப் பேட்டை மாவட்டம்
-------மனுதாரர்
----எதிர்----
திருமிகு. வருவாய் கோட்டாச்சியர் அவர்கள், அரக்கோணம்.
-------எதிர் மனுதாரர்

மேலே கண்ட முகவரியில் வசிக்கும் துளசி ஆகிய நான் எனது தாய் சகுந்தலா க/பெ பூங்காவனம் இவர் கடந்த 01-07-2017ல் இறந்தார் இவரது இறப்பு எங்கள் கவனக் குறைவால் எதிர் மனுதாரிடம் பதிவு செய்ய தவறி விட்டோம் எனவே, தாய் இறப்பு பதிவு செய்ய உத்தரவளிக்கும்படி கோரி உள்ளேன். எனவே இது குறித்து ஆட்சபேனை உள்ளவர்கள் நேரில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம் தவறினால் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கீ பட்டு உத்தரவு பெறப்படும் என அறியவும்.

இப்படிக்கு
துளசி.

**ENROLMENT**

After ten days of the Publication of this notice and within three months thereafter I, *G.Parthiban* S/O. D.Govindaraj, Age 55, Permanently Residing at No : 94, Jothi Nagar, Illuppaithandalam Village & Post, Takkolam Via, Arakkonam Taluk, Ranipet District, TamilNadu-631151. Intend having my enrolment as an Advocate moved before the Bar Council of TamilNadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-6000104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

-- Parthiban G

வட்டாட்சியர் அவர்கள்
திருப்பத்தூர்
ந.க.ஆ4/1777/2025
நாள்: 07.04.2025

வள்மதி, க/பெ.முருகன்,
கசிநாயக்கன்பட்டி கிராமம்,
திருப்பத்தூர் வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம்
........மனுதாரர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்.
........எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய, எனது கணவரின் தாயார் திருமதி.குப்பம்மாள் க/பெ.அப்பாதுரை என்பவர் கடந்த 15.06.2000-ம் தேதியில் திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கசிநாயக்கன்பட்டி கிராமத்தில் இறந்து விட்டார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

//உத்தரவுப்படி//

மனுதாரர்
வள்மதி, க/பெ.முருகன்,
கசிநாயக்கன்பட்டி கிராமம்,
திருப்பத்தூர் வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம்

வட்டாட்சியர் அவர்கள்
திருப்பத்தூர்
ந.க.ஆ4/1852/2025
நாள்: 11.04.2025

உஷா, க/பெ.பொன்னுசாமி,
ராச்சமங்கலம் கிராமம்,
திருப்பத்தூர் வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம்
........மனுதாரர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்.
........எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய, எனது மகன் சூர்யா த/பெ.பொன்னுசாமி என்பவர் கடந்த 05.06.2010-ம் தேதியில் திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ராச்சமங்கலம் கிராமத்தில் பிறந்தார். மேற்படி அவரது பிறப்பை பதிவு செய்து பிறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

//உத்தரவுப்படி//

மனுதாரர்
உஷா, க/பெ.பொன்னுசாமி,
ராச்சமங்கலம் கிராமம்,
திருப்பத்தூர் வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம்

தமிழ்நாடு அரசு
ஈரோடு மாவட்டம் – பேரூராட்சிகள் நிர்வாகம்
சலங்கபாளையம் பேரூராட்சி
சிறப்பு நிதி (Special Fund) 2025–2026
சாலை பணிகள்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண். 6-6/2024 நாள்: 29.04.2025

1. முழுமையான விவரங்களுக்கு https://tntenders.gov.in இணையதள முகவரியை பார்வையிடலாம்.
2. ஈரோடு மாவட்டம், சலங்கபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரால் சாலை பணி (ஒன்று) செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளில் இலவசமாக 30.04.2025 முதல் 20.05.2025 வரை உள்ள கால இடைவெளியில் எடுத்துக் கொள்ளலாம்.
4. அ) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் : 20.05.2025 மாலை 3.00மணி
ஆ) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 20.05.2025 மாலை 3.30மணி

செயல் அலுவலர்
செ.ம.தொ.இ / 1806 / ஒப்பந்தப்புள்ளி / 2025 சலங்கபாளையம் பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்

தமிழ்நாடு அரசு
ஈரோடு மாவட்டம் – பேரூராட்சிகள் நிர்வாகம்
சலங்கபாளையம் பேரூராட்சி
மூலதன மான்ய நிதி (CGF) 2025–2026
அலுவலக கட்டிடம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண். 6-7/2024 நாள்: 29.04.2025

1. முழுமையான விவரங்களுக்கு https://tntenders.gov.in இணையதள முகவரியை பார்வையிடலாம்.
2. ஈரோடு மாவட்டம், சலங்கபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரால் அலுவலக கட்டிடம் பணி (ஒன்று) செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளில் இலவசமாக 30.04.2025 முதல் 20.05.2025 வரை உள்ள கால இடைவெளியில் எடுத்துக் கொள்ளலாம்.
4. அ) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் : 20.05.2025 மாலை 3.00மணி
ஆ) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 20.05.2025 மாலை 3.30மணி

செயல் அலுவலர்
செ.ம.தொ.இ / 1805 / ஒப்பந்தப்புள்ளி / 2025 சலங்கபாளையம் பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்

தமிழ்நாடு அரசு
பேரூராட்சிகள் துறை - தேனி மாவட்டம், பூதிப்புரம் பேரூராட்சி
ந.க.எண். 07/ 2025 / நாள்: 28.04.2025

தேனி மாவட்டம் பூதிப்புரம் பேரூராட்சியில் 2025-2026 ஆம் நிதியாண்டில் சிறப்பு நிதி (Special Fund) திட்டத்தின் கீழ் தார்சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு. (இரண்டு உறைகள் முறைகள்)

1) தேனி மாவட்டம் பூதிப்புரம் பேரூராட்சியில் 2025-2026 ஆம் நிதியாண்டில் சிறப்பு நிதி (Special Fund) திட்டத்தின் கீழ் தார்சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலரால், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணிகள் வாரியாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தபுள்ளி தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. பணியின் மதிப்பீடு ரூ.205.00 இலட்சம்
3. பணி வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
4. பொதுவான நேரம் மற்றும் நாள்.

| | | |
|---|---|---|
| அ | ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்தல் | 02.05.2025 காலை 10.00 மணி முதல் 20.05.2025 மாலை 3.00 மணி வரை |
| ஆ | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 20.05.2025 மாலை 3.00 மணி வரை |
| இ | ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 20.05.2025 மாலை 3.30 மணி |

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

செயல் அலுவலர்.
செ.ம.தொ.இ / 1751 ஒப்பந்தப்புள்ளி / 2025 பூதிப்புரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
நத்தம் (சிறப்பு நிலை) பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம், ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை
கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2025-2026
ந.க.எண் : 436/2025/த.எ நாள்: 29.04.2025

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் சிறப்பு நிலை பேரூராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2025-26 திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 20.05.2025ம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை இணையதளத்தின் மூலமாக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இணையதளத்தின் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அன்றைய தினம் பிற்பகல் 03.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரித்து பரிசீலிக்கப்படும்.
ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 20.05.2025 - ஆம் தேதி மாலை 3.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | முன் வைப்புத்தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1 | கோவில்பட்டி பகவதி நகர் விரிவாக்க பகுதி 2வது தெரு, 3வது தெரு, கிழக்கு1வது குறுக்கு தெரு, கிழக்கு 2வது குறுக்கு தெரு, கிழக்கு 3வது குறுக்கு தெரு, கிழக்கு 4வது குறுக்கு தெரு, கிழக்கு 5வது குறுக்கு தெரு,விரிவாக்க பகுதி 5வது தெரு, விரிவாக்க பகுதி 6வது தெரு, ஆசாத்நகர் மேற்கு தெரு மற்றும்ஆசாத்நகர் மேற்கு தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை அமைத்தல் | 86.00 | 80000 | Class-I | 3 மாதங்கள் |
| 2 | கோவில்பட்டி பகவதி நகர் விரிவாக்க பகுதி 2வது தெரு, 3வது தெரு, கிழக்கு1வது குறுக்கு தெரு, கிழக்கு 2வது குறுக்கு தெரு, கிழக்கு 3வது குறுக்கு தெரு, கிழக்கு 4வது குறுக்கு தெரு, கிழக்கு 5வது குறுக்கு தெரு,விரிவாக்க பகுதி 5வது தெரு, விரிவாக்க பகுதி 6வது தெரு, விரிவாக்க பகுதி மெயின் சாலை மற்றும் தர்பார் நகர் மெயின் சாலை ஆகிய தெருக்களில் வடிகால் கட்டுதல் | 50.00 | 50000 | Class-I | 3 மாதங்கள் |
| | மொத்தம் | 136.00 | | | |

1) முன் வைப்பு தொகையினை செலுத்தப்பட்டதற்கான சலான் இணைக்கப்பட வேண்டும். 2) ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட இதர நிபந்தனைகளை நத்தம் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். 3) இத்திட்டம் கட்டுமானப்பணி முடிக்கப்பட்டவுடன், ஐந்தாண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு கட்டுமானம் பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்தச் செலவில் சீரமைத்து தரவேண்டும்.

செயல் அலுவலர். தலைவர்,
நத்தம் சிறப்பு நிலை பேரூராட்சி,திண்டுக்கல் மாவட்டம். செ.ம.தொ.இ / 1733 / ஒப்பந்தப்புள்ளி / 2025 நத்தம் சிறப்பு நிலை பேரூராட்சி,திண்டுக்கல் மாவட்டம்.

இராணிப்பேட்டை மாவட்டம்
பனப்பாக்கம் முதல்நிலை பேரூராட்சி

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண். 74/2025 நாள்: 29.04.2025

பனப்பாக்கம் பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் திட்டம் - TURIP-2025-2026-ன் கீழ் ரூ.95.50/– இலட்சம் மதிப்பீட்டில் பனப்பாக்கம் பேரூராட்சி பகுதியில் பேவர் பிளாக்சாலைகள் மற்றும் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in மற்றும் என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம். |
| 2 | ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்: அ) முன் கலந்தாய்வு கூட்டம் – 14.05.2025 காலை 11.00 மணி; ஆ ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் – 20.05.2025 மாலை 3.00 மணி வரை; இ ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் – 20.05.2025 மாலை 3.30 மணி |
| 3 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும். |

செயல் அலுவலர்
செ.ம.தொ.இ / 1738 / ஒப்பந்தப்புள்ளி / 2025 பனப்பாக்கம் பேரூராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம்

தமிழ்நாடு அரசு – பொதுப்பணித்துறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 01/2025– 2026/க(க&ப)வ–1/சென்னை/ நாள் : 29.04.2025
ஒப்பந்தம்–Lumpsum (இணையதள வழியில் மட்டும்)

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | இரு உறை முறை | | | |
| 1. | திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூரில் புதிய தொழில் பயிற்சி நிறுவனம் கட்டும் பணி (வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ்) | ரூ.529.40 இலட்சங்கள் | ரூ.2,75,000/– 10 (பத்து) மாதங்கள் | பொதுப்பணித் துறையில் பதிவு பெற்ற வகுப்பு –2 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |

1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in. 2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். 12.05.2025. 3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 15.05.2025 மாலை 3.00 மணி வரை. 4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 15.05.2025 மாலை 4.00 மணி. 5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.
செ.ம.தொ.இ./ 1778 /ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
நத்தம் (சிறப்பு நிலை) பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மூலதன மானிய நிதி திட்டம் (CGF) 2025-2026
ந.க.எண் : 447/2025/த.எ நாள். 30.04.2025

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் சிறப்பு நிலை பேரூராட்சி மூலதன மானிய நிதி திட்டம் (CGF) 2025-2026 திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 20.05.2025ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை இணையதளத்தின் மூலமாக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இணையதளத்தின் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரித்து பரிசீலிக்கப்படும்.
ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 20.05.2025 ஆம் தேதி மாலை 3.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1. | நத்தம் பேரூராட்சியில் புதிதாக கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டுதல் | 118.00 | 118000 | Class – I | 6 மாதங்கள் |

1. முன்வைப்பு தொகை செலுத்தப்பட்டதற்கான சலான் இணைக்கப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட இதர நிபந்தனைகளை நத்தம் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
3. இத்திட்டம் கட்டுமானப்பணி முடிக்கப்பட்டவுடன், ஐந்தாண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு கட்டுமானம் பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்தச் செலவில் சீரமைத்து தரவேண்டும்.

செயல் அலுவலர், தலைவர்.
செமதொஇ/1792/ஒப்பந்தப்புள்ளி/2025 நத்தம் சிறப்பு நிலை பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம். நத்தம் சிறப்பு நிலை பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
ஆத்தூர் நகராட்சி
மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

1. Special Fund 2025-2026 ன் கீழ் ஆத்தூர் நகராட்சியில் மண்சாலைகளை பேவர்பிளாக் சாலையாக மாற்றுதல் பணி மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணைய தளத்தின் வாயிலாக (https://tntenders.gov.in) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2. சிப்பத்தின் மதிப்பீடு ரூ.132.00 இலட்சம்
3. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தமான விபரங்களை https://tntenders.gov.in இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://tntenders.gov.in இணையதள முகவரியில் 30.04.2025 முதல் 16.05.2025 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்தாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் 09.05.2025 அன்று காலை 11.00 மணியளவில் ஆத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.
6. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் 16.05.2025 மாலை 3.00 மணி
7. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 16.05.2025 அன்று மாலை 3.30 மணி வரையில்
8. பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித்தொகை ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

அ.வ.சையத் முஸ்தபா கமால், பி.எஸ்.சி
ஆணையாளர், ஆத்தூர் நகராட்சி.
செ.ம.தொ.இ / 1803 / ஒப்பந்தப்புள்ளி / 2025

# வாலாஜா ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் வசிக்கும் 458 பேருக்கு ரூ.16.03 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான பணி ஆணை

## அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்




**சென்னை,மே.01**

கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்ஆர்.காந்தி (30.04.2025) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் வாலாஜா ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 2025-26 ஆம் நிதியாண்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வாலாஜா ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் வசிக்கும் 458 பயனாளிகளுக்கு தலா ரூ.3.50 இலட்சம் வீதம் ரூ.16.03 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் முனைவர். ஜெ.யு.சந்திரகலா, தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியதாவது:-கருணாநிதி தமிழ்நாட்டில் குடிசை வீடுகளுக்கு மாற்றாக கான்கீரிட் வீடுகள் கட்டும் திட்டத்தினை தொடங்கினார்கள். அதன்படி, குடிசையில்லா தமிழகத்தினை உருவாக்கு தலை இலக்காக கொண்டு “கலைஞரின் கனவு இல்லம்” என்னும் திட்டத்தினை முதலமைச்சர் செயல்படுத்தி வருகின்றார். எதிர்வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் குடிசை வீட்டில் வசிப்போருக்கும், வீடற்றோருக்கும் சுமார் 8 இலட்சம் கான்கீரிட் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்கிற உயரிய நோக்கத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றார்.முதற் கட்டமாக 2024-25 ஆம் நிதியாண்டில் தமிழகம் முழுவதும் 1,00,000 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கான 3500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள். அதில் இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு 3000 வீடுகள் ஒதுகீடு செய்யப்பட்டு ஒரு வீட்டிற்கு 360 சதுர அடி கொண்டு தலா ரூபாய்.3.50 இலட்சம் மதிப்பீட்டில் குடியிருப்புகள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேபோன்று, 2025-26 ஆம் நிதியாண்டில் இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு 1859 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி ஆணைகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், கடந்த 4 ஆண்டுகளில் பொதுமக்களின் அடிப்படை வசதிகள் அனைத்தும் கட்சி பேதமின்றி பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து தர மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளில் மகத்தான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். கலைஞர் மகளிர் உரிமைத் தொகையில் விடுபட்டவர்கள் எதிர்வரும் ஜீன் 4 2025 க்கு பிறகு விண்ணப்பிக்கலாம்.

இத்திட்டம் மேலும் விரிவுப்படுத்தப்பட்டு, தகுதியான மகளிர் அனைவருக்கும் உரிமைத் தொகை வழங்கப்படும். அறிஞர் அண்ணா, தந்தை பெரியார், முகலைஞர் ஆகியோர் மக்களுக்கும், பெண்களுக்கும் என்னென்ன திட்டங்களை செயல்படுத்திட நினைத்தார்களோ அதனை முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் ஒவ்வொன்றாக செயல்படுத்தி வருகின்றார்கள்.

தமிழ்நாடு மாநிலமானது மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தும் திட்டங்களை இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலங்களில் செயல்படுத்தி வருகின்றார்கள். அரசு செயல்படுத்தும் இதுபோன்ற மகத்தான திட்டங்களின் மூலம் பொதுமக்கள் தொடர்ந்து பயனடைய வேண்டுமென மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர்ஜெயந்தி திருமூர்த்தி, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.பா. ஜெயசுதா, ஒன்றியக் குழுத் தலைவர்சே.வெங்கட்ரமணன், துணைத் தலைவர்இராதாகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர். மாலதி கணேசன், ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர்செந்தில் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்செந்தாமரை, ரவிச்சந்திரன், வட்டாட்சியர்ஆனந்தன், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பொய்பாக்கத்தில் நீர் மோர் பந்தல்: அரக்கோணம் ரவி எம்எல்ஏ திறந்து வைத்தார்



**அரக்கோணம் மே-01**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் வட்டம் பொய்ப்பாக்கம் ஊராட்சி கிராமம் அரக்கோணம் காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது

இவ்விழாவில் கலந்து கொள்ள வந்த மாவட்ட செயலாளருக்கு பட்டாசு வெடித்து பூ மாலை சூட்டி வரவேற்கப்பட்டார் தொடர்ந்து நீர்மோர் பந்தல் திறப்பு விழாவிற்கு ராணிப்பேட்டை மாவட்ட துணை செயலாளர் மீனா ரகுபதி தலைமை தாங்கினார் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்த பொய்பாக்கம் கிளைச் செயலாளர் ஆறுமுகம் (6) முன்னிலை வகித்தார் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட செயலாளர் சு.ரவி எம்எல்ஏ கலந்து கொண்டு நீர்மோர் பந்தலை திறந்து தர்பூசி வெல்லேரி பிஞ்ச் இளநீர் முந்திரி பழம் மற்றும் வகை, வகையான குளிர் பானங்களை பொது மக்களுக்கு வழங்கினார் இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் பழனி மாவட்ட நிர்வாகிகள் நரேஷ் காந்த ஜெகன் பாபு அம்மனூர் கேஆர்.சீனிவாசன் மற்றும் பொய் பாக்கம் அருண் குமார் நந்தா சரண்ராஜ் மணிமேகலை கௌரி நாகஜோதி செய்யூர் பெருமாள் வா.பாளையம் உள்ளிட்ட திரளான பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

# ஆற்காடு நகராட்சியின் அவசர கூட்டம்



**ராணிப்பேட்டை, மே, 1-**

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகராட்சியின் அவசரக் கூட்டம் கூட்டரங்கில் நடைபெற்றது.

**கூட்டம்**

கூட்டத்திற்கு நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் தலைமை தாங்கினார். நகராட்சி ஆணையாளர் வெங்கட்ட லட்சுமணன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் பேசிய நகர மன்ற உறுப்பினர் பொன்.ராஜசேகர் பேருந்து நிலையத்தில் புதியதாக திறக்கப்பட உள்ள நவீன கட்டண கழிப்பறையை பொதுமக்கள் பயன்படுத்தும் போது அரசாங்கம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை மட்டும் வசூலிக்க வேண்டும் . அதை மீறி அதிக கட்டணம் வசூலித்தால் ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் நகர மன்ற உறுப்பினர்கள் நகராட்சி அதிகாரிகள்உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் நகராட்சியில் ரூ.42.40லட்சம் மதிப்பீட்டில் கனக குசாம்பாள் சமேத சோழபூரிஸ்வரர் கோயில் புனரமைக்கும் பணிக்கு பூமிபூஜையை அமைச்சர் ஆர்.காந்தி துவக்கி வைத்தார். இதில் கலெக்டர் ஜெ.யு.சந்திரகலா, முனிரத்தினம் எம்எல்ஏ, நகர்மன்ற தலைவர் தமிழ்செல்வி, அறநிலையத்துறை இணை ஆணையர் அனிதா கலந்து கொண்டனர்.

# ஏரி நீர் பிடிப்பு பகுதியில் அரசு ஊழியருக்கு வழங்கப்பட்ட இடத்தை அளவீடு செய்ய எதிர்ப்பு: சோமாசிபாடி கிராம மக்கள் போராட்டம்



**திருவண்ணாமலை , மே.1-**

ஏரி நீர் பிடிப்பு பகுதியில் அரசு ஊழியருக்கு விதி முறை மீறி வழங்கப்பட்ட இடத்தை அளவீடு செய்யக் கூடாது என கிராம மக்கள் போராட்டம் நடத்தினர்.

திருவண்ணாமலை அடுத்த கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியம் சோமாசிபாடி கிராமத்தில் ஏரி நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருவருக்கு வழங்கப்பட்ட இடத்தை அளவிடு செய்வதற்காக கீழ்பென்னாத்தூர் தாசில்தார் சான் பாஷா தலைமையில் வருவாய் துறை ஊழியர்களும் நில அளவையர்களும் வந்திருந்தனர். இதேபோல் நிலத்தின் உரிமையாளர் என கூறப்படுபவரும் கோர்ட் உத்தரவு நகலோடு வந்திருந்தார்.

அப்போது அங்கு திரண்டு இருந்த நூற்றுக்கணக்கான கிராம மக்கள் இது ஏரி நீர் பிடிப்பு என்பதற்கான ஆவணங்களை அதிகாரியிடம் காட்டி நிலத்தை அளவீடு செய்வதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து அளவீடு பணியை வேறொரு நாளுக்கு தள்ளி வைத்து விட்டு அதிகாரிகள் திரும்பி சென்றனர்.

பொதுமக்கள் தரப்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறப்பட்டிருப்பதாவது, எங்கள் ஏரி 268.46 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். மேற்கண்ட ஏரி நீர்பிடிப்பு பகுதியில், எங்கள் கிராமத்திற்கு எந்தவித சம்மந்தமும், பூர்வீகமும் இல்லாத ஜெயராமன் என்பவர் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்த போது தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, எங்கள் கிராம ஏரி நீர் பிடிப்புப் பகுதியில் சுமார் 3 ஏக்கர், (பட்டா எண் 47) மூலமாக சுமார் 50ஆண்டுகளுக்கு முன் பதிவு செய்து கொண்டார்.

தற்போது பட்டாவிற்கு உரிமை கோரி வருபவர்கள் யாரும் எங்கள் கிராமத்தை சார்ந்தவர்கள் இல்லை, பட்டாவை மாற்ற கோரும் நபரும் சென்னையில் வசித்து வருவதாக தெரிய வருகிறது. மேற் கண்ட நபர் 2023 ஆம் ஆண்டு பட்டா மாற்றம் செய்ய வரும் போது தான், ஊர் பொது மக்களுக்கு இது பற்றி தெரிய வந்தது. அந்த இடத்தில் எந்த விவசாயமும் நடைபெறவில்லை. சில அரசியல் பிரமுகர்களும், ரியல் எஸ்டேட் அதிபர்களும் இந்த ஏரி நீர் பிடிப்பு பகுதியை கையகப்படுத்த முற்படுகிறார்கள் என்பதை தெரிவித்துக் கொண்டு சென்னை உயர் நீதிமன்றம் நீர் பிடிப்பு பகுதியில் கொடுக்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யலாம் என வழங்கிய தீர்ப்புகளின் அடிப்படையில் மேற்கண்ட பட்டாவை ரத்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு மனுவில் தெரிவித்துள்ளனர்.




ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா பேருந்து நிலையத்தில் தமிழக அரசின் சாதனைகள் நலத்திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

# சென்னை காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் முகாமில் பொதுமக்களின் 19 புகார் மனுக்கள்

## விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவு

**சென்னை,மே.01**

பெருநகர காவல் ஆணையாளர்ஆ.அருண், சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்று வரும் பொதுமக்கள் குறை தீர் முகாமில், காவல் அதிகாரிகள் பொதுமக்களின் புகார் மனுக்களை பெற்று விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.



**உத்தரவு**

இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணை யா ளர்.ஆ.அ ருண், (30.04.2025) புதன்கிழமை காவல் ஆணையரகத்தில் புகார் மனு கொடுக்க வந்த பொதுமக்களிடம் இருந்து 19 புகார் மனுக்களை பெற்று, விரைந்து விசாரணைமேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சென்னை பெருநகர காவல், துணை ஆணையாளர் நிர்வாகம்.சுப்புலட்சுமி, உடன் இருந்தார்.

# செங்கம் நகராட்சி புதிய ஆணையர் பொறுப்பேற்பு



**செங்கம் மே01**

செங்கம் தேர்வு நிலை பேரூராட்சி தமிழக அரசால் தரம் உயர்த்தப்பட்டு நகராட்சியாக அறிவிக்கப்பட்டது. செங்கம் நகராட்சியின் புதிய நகராட்சி ஆணையராக பாரத் பதவி ஏற்றார். இவர் வேலூர் மண்டல பேரூராட்சி உதவி இயக்குனர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த நிலையில் பதவி உயர்வு பெற்று புதிதாக அறிவிக்கப்பட்ட செங்கம் நகராட்சிக்கு ஆணையராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

# கொலை முயற்சி வழக்கில் 4 பேருக்கு 5 ஆண்டு சிறை

**சென்னை மே 01-**

சென்னை, ஷெனாய் நகர், பாரதிபுரம் மெயின் தெருவில் வசித்து வந்த சதிஷ்குமார், என்பவரை இடப்பிரச்சனையில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக கடந்த 10.03.2021 அன்று சில நபர்கள் சேர்ந்து, கத்தியால் தாக்கி, கொலைமுயற்சியில் ஈடுபட்டனர். இரத்த காயமடைந்த சதிஷ்குமார் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். இது குறித்து சதிஷ்குமாரின் சகோதரி காயத்திரி, என்பவர் கொடுத்த புகாரின்பேரில், அமைந்தகரை காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, எதிரி 1.பாலமுரளி, 2.அப்பாஸ், 3. வினோத்குமார், சென்னை, 4.பாலாஜி, 5.சக்திவேல், 6. வெங்கடாஜலபதி (எ) வெங்கடேஷ், ஆகிய 6 பேரை கடந்த 2021ஆம் வருடம் கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அமைந்தகரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, சென்னை, சிங்காரவேலன் மாளிகையில் உள்ள 19வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, வழக்கு விசாரணை நடைபெற்று, நீதிமன்ற வழக்கு விசாரணை முடிவடைந்து இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.மேற்படி வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகள் பாலமுரளி, அப்பாஸ், வினோத்குமார், சக்திவேல் ஆகிய 4 நபர்கள் மீதும் குற்றம் நிரூபிக்கப்பட்டதால், மேற்படி 4 குற்றவாளிகளுக்கும், 5 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் தலா ரூ.1,500/- அபராதமும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 6 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி தீர்ப்பு வழங்கினார். பாலாஜி மற்றும் வெங்கடாஜலபதி (எ) வெங்கடேஷ் ஆகிய இருவரும் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி சாட்சிகளை ஆஜர்படுத்தி, தொடர்ச்சியான நடவடிக்கைகளினால் நீதிமன்றத்தில் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்று தந்த அமைந்தகரை காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் காவல் குழுவினரை உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

# சென்னை மாநகராட்சி பள்ளியில் மாணவர் சேர்க்கை உயர்வு

**சென்னை மே 01-**

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் தற்போது வரை 13,800 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். கடந்த ஆண்டைவிட சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மாணவர் சேர்க்கை உயர்ந்துள்ளது. மாநகராட்சி பள்ளிகளில் கடந்த ஆண்டை விட தற்போது வரை 7,800 மாணவர்கள் கூடுதலாக சேர்ந்துள்ளனர்.

# தரமணி பகுதியில் வாலிபர் மீது தாக்குதல்: 3 பேர் கைது

**சென்னை மே 01-**

சென்னை, திருவான்மியூர், பாரதிதாசன் 2வது தெருவில் வசித்து வரும் பாண்டியராஜன், என்பவர் நேற்று முன் தினம் அதே பகுதியைச் சேர்ந்த சூர்யா, என்பவருடன் இருசக்கர வாகனத்தில் இந்திரா நகர் இரயில் நிலையம் எதிரில் ரோட்டிலுள்ள பாலிடெக்னிக் அருகில் 3 பேர் திருநங்கைகளிடம் தகராறு செய்து கொண்டிருந்தபோது, பாண்டியராஜன் இருசக்கர வாகனத்தை நிறுத்தி 3 பேரிடம் ஏன் இவ்வாறு தகராறு செய்கிறீர்கள் என கேட்டுள்ளார்

**தாக்குதல்**

உடனே 3 நபர்களும் பாண்டியராஜனை கையால் அடித்து, அருகிலிருந்த கட்டையை எடுத்து பாண்டியராஜனை பலமாக தாக்கியும், தடுக்க சென்ற சூர்யாவையும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்து காரில் தப்பிச் சென்றனர்.

**ரத்த காயம்**

இரத்தக்காயமடைந்த பாண்டியராஜனை அருகிலிருந்தவர்கள் உதவியுடன், இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்து உள்நோயாளிகயாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து சூர்யா கொடுத்த புகார் மீது தரமணி காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

**விசாரணை**

தரமணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 1.பாலகுரு, இவரது சகோதரர் 2.பரத்குரு, 3.ஹரிகிருஷ்ணன், ஆகிய 3 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய கட்டை மற்றும் ஸ்விப்ட் கார் பறிமுதல் செய்யப்பட்டது.

**வழக்கு**

விசாரணையில் எதிரி பாலகுரு மீது ஏற்கனவே போக்சோ வழக்கு உட்பட 2 குற்ற வழக்குகளும் மற்றொரு எதிரி ஹரிகிருஷ்ணன் மீது பாலியல் வன்புணர்ச்சி வழக்கும் உள்ளது தெரியவந்தது.

**கைது**

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்:

# வீரர்களை இறுதி செய்வதில் தீவிரம் காட்டும் பி.சி.சி.ஐ.

**மும்பை, மே 01-**

இந்திய அணி அடுத்ததாக இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. இந்த தொடர் அடுத்த மாதம் 20-ம் தேதி தொடங்க உள்ளது. இதில் பங்கேற்கும் இந்திய வீரர்களை தேர்வு செய்வதில் பி.சி.சி.ஐ. தீவிரம் காட்டி வருகிறது


**தொடர் முக்கியத்துவம்...**

2025-2027 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் அங்கமாக நடைபெறும் இந்த தொடரில் வெற்றி பெற இரு அணிகளும் கடுமையாக போராடும் என்பதால் இந்த தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. அத்துடன் சமீப காலங்களாக டெஸ்ட் போட்டிகளில் தொடர் தோல்விகளை சந்தித்து வரும் இந்திய அணி வெற்றிப்பாதைக்கு திரும்ப வேண்டிய கட்டாயத்தில் களமிறங்க உள்ளது.

**35 வீரர்கள் தேர்வு...**

இந்நிலையில் வரவிருக்கும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் விளையாடும் இந்திய அணி .மே மாதம் 2வது வாரத்திற்குள் இந்திய அணி தேர்வு செய்யப்பட வாய்ப்பு உள்ளதாக தெரிகிறது. இந்தியா மற்றும் இந்தியா ஏ அணிக்காக 35 வீரர்கள் தேர்வு செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஐபிஎல் போட்டியில் சிறப்பாக விளையாடிவரும் சாய் சுதர்சன் மாற்று வீரராக இருக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது . படிதார் , கருண் நாயர் இடம் பெற்றுள்ளனர் என்றும் குல்தீப் யாதவ் மீண்டும் அணிக்குத் திரும்ப உள்ளார் என்றும் கூறப்படுகிறது.

# ரஹானே, அக்ஷர் பட்டேல் காயம்



**கொல்கத்தா, மே 01-**

கொல்கத்தா - டெல்லி இடையிலான போட்டியில் கேப்டன்கள் ரஹானே, அக்ஷர் பட்டேல் இருவரும் காயமடைந்தனர்.

**அபார வெற்றி....**

நடப்பு ஐபிஎல் தொடரின் லீக் சுற்றில் நேற்று டெல்லி அருண் ஜேட்லி திடலில் நடைபெற்ற கொல்கத்தா - தில்லி இடையிலான பரபரப்பான போட்டியில் கொல்கத்தா அணி 14 ரன்கள் வித்தியாசத்தின் அபார வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடிய பொறுப்பு கேப்டன் சுனில் நரைன் ஆட்டநாயகன் விருதை வென்றார். 18 வது ஓவரின்போது மிட் விக்கெட்டில் பீல்டிங் செய்து கொண்டிருந்த டெல்லி அணியின் கேப்டன் அக்ஷர் பட்டேல் கையில் காயம் ஏற்பட்டு மைதானத்தை விட்டு வெளியேறினார். இருப்பினும், அவர் மீண்டும் பேட்டிங் செய்ய வந்து 23 பந்துகளில் 43 ரன்கள் எடுத்து அசத்தினார்.

**இரண்டு தையல்கள்...**

இதற்கிடையில், கொல்கத்தா அணியின் கேப்டனான ரஹானேவுக்கும் ஷார்ட் கவரில் பீல்டிங் செய்யும் போது கையில் அடி விழுந்தது. அதன் பிறகு அவர் களமிறங்கவில்லை. அவருக்குப் பதிலாக சுனில் நரைன் பொறுப்பு கேப்டனாக நியமிக்கப்பட்டார். இதுகுறித்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஆல் ரவுண்டர் அனுகுல் ராய் கூறுகையில், ரஹானேவுக்கு இரண்டு தையல்கள் போடப்பட்டுள்ளதாகவும், அவை இரண்டு அல்லது மூன்று நாள்களில் குணமாகும் என்றும் தெரிவித்தார்.

## டெல்லி அணி தோல்வி:

# சுனில்நரைனுக்கு கொல்கத்தா கேப்டன் ரஹானே புகழாரம்

**புதுடெல்லி, மே 01-**

ஐ.பி.எல். தொடரில் டெல்லியில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதியது.

**205 ரன்கள் இலக்கு...**

இதில் முதலில் பேட்டிங் செய்த கொல்கத்தா 20 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 204 ரன்கள் எடுத்தது. கொல்கத்தா தரப்பில் அதிகபட்சமாக ரகுவன்ஷி 44 ரன் எடுத்தார். டெல்லி தரப்பில் சில போட்டிகளாக விக்கெட் எடுக்க திணறிய ஸ்டார்க் 3 விக்கெட் எடுத்து அசத்தினார். தொடர்ந்து 205 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய டெல்லி 20 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 190 ரன்கள் மட்டுமே எடுத்தது. டெல்லி தரப்பில் அதிகபட்சமாக டு பிளெஸ்சிஸ் 62 ரன் எடுத்தார். கொல்கத்தா தரப்பில் சுனில் நரேன் 3 விக்கெட் வீழ்த்தினார்.

**நரேன் வீசிய ஓவர்கள்...**

இந்நிலையில், இந்த போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் கொல்கத்தா கேப்டன் ரஹானே அளித்த பேட்டியில் கூறியதாவது, இந்த போட்டியின் 13-வது ஓவரில் தான் போட்டி எங்கள் வசம் திரும்பியது. சுனில் நரேன் வீசிய ஓவர்கள் அவர் எடுத்த விக்கெட்டுகள் தான் எங்களை ஆட்டத்திற்குள் கொண்டு வந்தது. 205 ரன்கள் என்கிற இலக்கு இந்த மைதானத்தில் எட்டக்கூடிய ஒன்று தான். முதல் பாதியில் நாங்கள் 15 ரன்கள் வரை குறைவாக எடுத்து விட்டோம்.

**சாம்பியன் பவுலராக...**

ஆனால், இரண்டாவது பாதியில் எங்களுடைய பந்து வீச்சாளர்கள் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தியதாலே வெற்றி பெற்றோம். அதிலும் குறிப்பாக சுனில் நரேன் இந்த போட்டியில் மிகச் சிறப்பாக செயல்பட்டிருந்தார். அவருடைய மிகச்சிறந்த செயல்பாடு எங்கள் அனைவருக்கும் நம்பிக்கையை அளித்தது. கடந்த பல ஆண்டுகளாகவே எங்களது அணியின் சாம்பியன் பவுலராக அவர் இருந்து வருகிறார். அவரும் வருண் சக்ரவர்த்தியும் எங்கள் அணியில் இருப்பது மிகப்பெரிய பலம். எங்கள் அணி வீரர்கள் மிகக் கடுமையாக உழைக்கின்றனர். ஒரு அணியாக நிச்சயம் நாங்கள் மீண்டும் மிக சிறப்பான செயல்பாட்டை தொடர்ந்து வெளிப்படுத்துவோம். இவ்வாறு அவர் கூறினார்.

**மிக நெருக்கமாக....**

இந்த நிலையில் தோல்வி தொடர்பாக பேசிய டெல்லி கேப்டன் அக்சர் படேல் கூறியதாவது, நாங்கள் 15-20 ரன்கள் அதிகமாக விட்டுக்கொடுத்தோம். சில விக்கெட்டுகளையும் எளிதான முறையில் இழந்தோம். பவர்பிளேவுக்குப் பிறகு அவர்களை எப்படி கட்டுப்படுத்தினோம் என்பதுதான் நேர்மறையானது, சில பேட்டர்கள் தோல்வியடைந்தாலும், நாங்கள் 2-3 பேட்ஸ்மேன்கள் பங்களித்து அதை மிக நெருக்கமாக கொண்டு சென்றோம். விப்ராஜ் பேட்டிங் செய்தபோது நம்பிக்கை இருந்தது, டைவ் செய்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது. ஆனால் நல்ல விஷயம் அடுத்த போட்டிக்கு 3-4 நாட்கள் இடைவெளி உள்ளது, நான் குணமடைய முடியும் என்று நம்புகிறேன்.என தெரிவித்தார்.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெங்களூரு | 10 | 7 | 3 | 14 | +0.521 |
| 2 | மும்பை | 10 | 6 | 4 | 12 | +0.889 |
| 3 | குஜராத் | 9 | 6 | 3 | 12 | +0.748 |
| 4 | டெல்லி | 10 | 6 | 4 | 12 | +0.362 |
| 5 | பஞ்சாப் | 9 | 5 | 3 | 11 | +0.177 |
| 6 | லக்னோ | 10 | 5 | 5 | 10 | -0.325 |
| 7 | கொல்கத்தா | 10 | 4 | 5 | 9 | +0.271 |
| 8 | ராஜஸ்தான் | 10 | 3 | 7 | 6 | -0.349 |
| 9 | ஐதராபாத் | 9 | 3 | 6 | 6 | -1.103 |
| 10 | சென்னை | 9 | 2 | 7 | 4 | -1.302 |

## இன்றைய ஐ.பி.எல் (50-வது லீக்)



அணிகள் - ராஜஸ்தான் vs மும்பை

இடம் - ஜெய்ப்பூர் மணி - இரவு 7.30

## பஹல்காம் தாக்குலில்

# பலியானவரின் குடும்பத்தினரை நேரில சந்தித்து ராகுல் ஆறுதல்

**பஹல்காம், மே 01-**

பஹல்காம் தாக்குதலில் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டவரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆறுதல் கூறினார்.

உத்தரப் பிரதேசம் ரேபரேலி மற்றும் அமேதி மக்களவை தொகுதிக்குள்பட்ட பகுதிகளில் ராகுல் காந்தி இரண்டு நாள்கள் சுற்றுப் பயணமாக சென்றுள்ளார். நேற்றுமுன்தினம் தனது சொந்த தொகுதியாக ரேபரேலியில் ஆய்வு மேற்கொண்ட அவர், நேற்று அமேதி தொகுதியில் பல்வேறு திட்டங்களை தொடங்கிவைத்து ஆய்வு செய்தார். இதனைத் தொடர்ந்து, கான்பூர் சென்ற ராகுல் காந்தி, பஹல்காம் தாக்குதலில் கொல்லப்பட்ட சுபம் திவேதி என்பவரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

அப்போது அங்கு கூடியிருந்த செய்தியாளர்களிடம், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சிறப்புக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். முன்னதாக, பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து அமெரிக்க சுற்றுப்பயணத்தை பாதியில் ரத்து செய்துவிட்டு நாடுதிரும்பிய ராகுல் காந்தி காங்கிரஸ் செயற்க்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

பின்னர், ஜம்மு - காஷ்மீருக்குச் சென்ற ராகுல் காந்தி தாக்குதலில் காயமடைந்தவர்களை மருத்துவமனையில் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். மேலும், பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக மத்திய அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சிகள் உடன் நிற்கும் என்று ராகுல் காந்தி தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் மனைவி, மகனைக் கொன்று

# இந்திய தொழிலதிபர் தற்கொலை

**நியூயார்க், மே 01-**

அமெரிக்காவின் நியூகாஸ்டில் பகுதியில் வசித்து வந்த கர்நாடக மாநிலம் மைசூருவைச் சேர்ந்த தொழிலதிபர் ஹர்ஷவர்தனா கிக்கேரி (45), தனது மனைவி சுவேதா (41) மற்றும் 14 வயது மகன் துருவா கிக்கேரியை சுட்டுக்கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

ஏப்ரல் 24ஆம் தேதி இந்த சம்பவம் நடந்ததாகவும், சம்பவத்தின் போது இவர்களது இளைய மகன் வீட்டில் இல்லாததால், அவர் உயிர் பிழைத்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சாலையில் துப்பாக்கிக் குண்டுகள், வீட்டு ஜன்னல் முழுவதும் ரத்தக் கறை.. என ஹோலோவோர்ல்டு தலைமை செயல் நிர்வாகியும், கர்நாடகத்தைச் சேர்ந்தவருமான ஹர்ஷவர்தனா கிக்கேரி, தனது மனைவி மற்றும் மகனை சுட்டுக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டிருக்கும் சம்பவம் குறித்து அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இந்த சம்பவத்துக்குப் பின்னணி என்ன என்பது குறித்து தெரியவரவில்லை. விசாரணை முடிந்து, சம்பவத்தின் பின்னணியில் நடந்தது என்ன என்பது கண்டறியப்படும்வரை இது குறித்து வேறெந்த கருத்துகளும் கூற முடியாது என விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


## தோனி ஓய்வு: கில்கிறிஸ்ட்

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் 49-வது லீக் ஆட்டம் சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று இரவு நடந்தது. இதில் தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. 5 முறை கோப்பையை வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நடப்பு சீசனில் மிகவும் பரிதாபமான நிலையில் உள்ளது. 9 போட்டியில் விளையாடி இரண்டில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. 7-ல் தோல்வி கண்டு புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது. எஞ்சிய 5 ஆட்டத்திலும் வெற்றி பெற்றால் புள்ளிகள் பட்டியலில் கவுரவமான இடத்தை பிடிக்கும்.

இந்த நிலையில் ஐபிஎல் போட்டியில் இருந்து தோனி ஓய்வு பெற வேண்டும் என ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் கில்கிரிஸ்ட் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது , தோனி நிரூபிப்பதற்கு எதுவுமே இல்லை. அவருக்கு என்ன செய்வது என்று தெரியும், அவர் இனி ஐபிஎல் போட்டிகளில் விளையாட வேண்டிய அவசியம் இல்லை . நான் உங்களை நேசிக்கிறேன் தோனி. நீங்கள் ஒரு சாம்பியன் என தெரிவித்துள்ளார்.

## நான் சிறந்த பீல்டரா? நரேன்

டெல்லிக்கு எதிரான போட்டியின் ஆட்டநாயகன் விருது சுனில் நரேனுக்கு வழங்கப்பட்டது. ஐ.பி.எல். தொடரில் டெல்லியில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் கொல்கத்தா வெற்றி பெற்றது. ஆட்டநாயகன் விருது வென்ற சுனில் நரேன் அளித்த பேட்டியில் கூறியதாவது, இது முழுமையாக அணியின் முயற்சி. நாங்கள் மிடில் ஓவர்களில் நன்றாக செயல்பட்டோம். ரகுவன்ஷி, ரிங்கு சிங் பேட்டிங்கில் அசத்தினார்கள். பின்னடைவைச் சந்தித்தாலும் அதிலிருந்து கம்பேக் கொடுத்து அணியின் வெற்றிகளில் பங்காற்ற எனக்கு நானே ஆதரவு கொடுக்கிறேன். நீங்கள் தடுமாறினாலும் நன்றாக முடிக்கக்கூடிய போட்டிகள் இருக்கும்.



நான் எடுத்த அனைத்து விக்கெட்டுகளையும் ரசித்தேன். நான் சிறந்த பீல்டர் கிடையாது. இருப்பினும் வாய்ப்பு கிடைக்கும் போது ரன் அவுட் செய்வது எப்போதும் நல்லது. அதற்கு முடிந்தளவுக்கு வேகமாக பந்தை சுழற்றி தூக்கி எறிய வேண்டும். அழுத்தமான சூழ்நிலையில் கேப்டன் உங்களை நம்பி பவுலிங் செய்யும் வாய்ப்பைக் கொடுப்பதற்கான நம்பிக்கையை நீங்கள் ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட வீரராக நீங்கள் இருக்க வேண்டுமெனில் போட்டிகள் இல்லாத நேரத்திலும் கடினமாக உழைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஓய்வு அறிவிப்பு ஏன்? அஸ்வின்

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பார்டர் - கவாஸ்கர் டிராபி தொடரின்போது ஓய்வு அறிவித்தது ஏன் என்று அஸ்வின் மனம் திறந்துள்ளார். பிரிஸ்பனில் நடைபெற்ற 3வது டெஸ்ட் போட்டியின்போது அஸ்வின் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இது பலருக்கும் ஆச்சரியத்தை அளித்தது, இன்னும் 2 டெஸ்ட்கள் இருக்கும்போது எப்படி ரிட்டையர் ஆவார் என்ற கேள்விகள் எழுந்தன.

இந்நிலையில், 'மைக் டெஸ்டிங் 1,2,3' என்ற பாட்காஸ்ட்டில் மைக் ஹஸ்சியுடன் உரையாடிய அஸ்வின் மேலும் சில விஷயங்களைக் கூறினார். உள்ளபடியே கூற வேண்டுமெனில், 100-வது டெஸ்ட்டுடன் ஓய்வு அறிவிக்கலாம் என்று இருந்தேன். ஆனால் சரி, உள்நாட்டுத் தொடர் விளையாடுவோம் என்று முடிவெடுத்தேன். அதாவது நன்றாக ஆடுகிறோம், விக்கெட்டுகளைக் கைப்பற்றுகிறோம் இன்னும் கொஞ்சம் ஆடலாமே என்று முடிவெடுத்தேன். கொஞ்சம் கூட விளையாடலாம் என்பது அர்த்தமுள்ள முடிவுதான். நான் கேளிக்கையுடன் தான் இதைச் செய்தேன். மீண்டும் மைதானத்துக்கு திரும்புவதற்காக நான் மேற்கொண்ட பயிற்சி, உடலுழைப்புகள், கடினமான அடியெடுப்புகள் அனைத்தும் என் குடும்ப நேரத்தை இரையாக்கின என்பதுதான் உண்மை என அஸ்வின் கூறியுள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கொளத்தூர், ஜி.கே.எம். காலனி 12-வது தெருவில் அமைந்துள்ள சென்னை தொடக்கப்பள்ளியின் 2-வது தளத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாலை நேர சிறப்பு வகுப்பு மையமான முதல்வர் கல்விச்சோலையை திறந்து வைத்து மாணவர்களுடன் உரையாடினார்.

# கூட்டாட்சி மிக்க இந்தியாதான் உண்மையான தேசபக்தியாகும்

## தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

**சென்னை, மே 01-**

தேசபக்தி என்பது நமக்குத் தேர்தல் அரசியல் முழக்கமல்ல. மாநில உரிமைகளுடனான கூட்டுறவுக் கூட்டாட்சி மிக்க இந்தியா என்பதே உண்மையான தேசபக்தியாகும் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவரும் முதல்வருமான ஸ்டாலின் தனது தொண்டர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது: தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோளுண்டு' என்று பாடிய புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் வரிகளை நெஞ்சில் ஏந்தி, தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மத்திய அரசு நம் பாதையில் தடைக்கற்களை அள்ளி அள்ளிப் போட்டாலும், அதனை எதிர்கொள்ளும் தடந்தோள்களுடனும் வலிமை மிக்க கால்களுடனும் திராவிட மாடல் அரசின் வெற்றிப் பயணம் மக்கள் நலன் காக்கும் சாதனைத் திட்டங்களுடன் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கவிதை வரிகளால் நமக்கு உணர்வூட்டிய திராவிடக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்தநாளையொட்டி ஏப்ரல் 29 முதல் மே 5 வரை தமிழ் வார விழா சிறப்பாகக் கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடெங்கும் அரசின் சார்பில் தமிழ்க் கொண்டாட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திராவிட மாடல் ஆட்சியில் சட்டப்பேரவையில் எந்த அறிவிப்பு வெளியிடப்பட்டாலும் அது முந்தைய ஆட்சியைப் போல வெறும் மேசையைத் தட்டுவதற்கான அறிவிப்பாக மட்டும் இருப்பதில்லை. அறிவிக்கப்பட்டவை செயல்வடிவம் பெற வேண்டும் என்ற உறுதியுடன், கடைக்கோடி கிராமம் வரை அது சென்று சேரும் வரை தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற பொறுப்பில் உள்ள உங்களில் ஒருவனான நான் ஓய்வதில்லை.

தமிழ்நாடு அரசின் 2025-26-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மக்களுக்குப் பலன் தரும் பல்வேறு அறிவிப்புகள் வெளியான நிலையில், அந்தந்த துறை சார்பிலான மானியக் கோரிக்கைகளுடன் சட்டப் பேரவைக் கூட்டத்தொடர் ஏறத்தாழ ஒன்றரை மாதங்கள் நடைபெற்றுள்ளது. ஒவ்வொரு துறையைச் சார்ந்த அமைச்சர்களும் தங்கள் துறை சார்ந்த திட்டங்களுக்கான அறிவிப்புகளை வெளியிட்டதுடன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்கள் தொகுதிக்காக ஒவ்வொரு துறைக்கும் முன்வைத்த கோரிக்கைகளுக்கும் பதிலுரைகள் அளித்து, பலவற்றை நிறைவேற்றிடவும் உறுதி அளித்துள்ளனர்.

ஒவ்வொரு முறையும் நிதிநிலை அறிக்கை மற்றும் மானியக் கோரிக்கைகள் தொடர்பான சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் நடைபெறும் இந்த வழக்கமான நடவடிக்கைகள் மட்டுமின்றி, இந்தக் கூட்டத்தொடரில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல நிகழ்வுகள் நிறைவேறியும் பதிவாகியும் உள்ளன. மக்கள் பிரதிநிதிகளான சட்டப்பேரவை உறுப்பினர்களின் பெரும்பான்மையான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காத ஆளுநரின் செயலுக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில், ஆளுநரின் நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததுடன், இந்தியா முழுவதுமுள்ள மாநிலங்கள் அனைத்தையும் ஆளுநர்களின் எதேச்சாதிகாரப் பிடியிலிருந்து மீட்டெடுக்கக் கூடிய பல முக்கிய அம்சங்களையும் தீர்ப்புரையில் தெரிவித்திருக்கிறது.

இந்தியாவில் உள்ள பல மாநிலங்கள், குறிப்பாக பா.ஜ.க. ஆட்சிக்கு வந்துள்ள மாநிலங்கள் செயல்படுத்தும் திராவிட மாடல் அரசின் திட்டம் என்பது குடும்பத்தலைவியருக்கு மாதந்தோறும் உரிமைத்தொகை வழங்கும் திட்டம். தமிழ்நாட்டில் முதன்முறையாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்ற பெயரில் உங்களில் ஒருவனான என் தலைமையிலான திராவிட மாடல் அரசு பெண்களுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டம் மூலமாக 1 கோடியே 16 லட்சம் குடும்பத் தலைவிகள் பயன் பெற்று வருகிறார்கள். இந்தத் திட்டத்தில் மேலும் பயன் கிடைக்கவேண்டிய தகுதியுள்ள மகளிருக்கு உரிமைத் தொகை வழங்குவதற்கான அறிவிப்பையும் இந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் வெளியிட்டுள்ளேன். இதற்காகத் தமிழ்நாடு முழுவதும் முகாம்கள் நடத்தப்படவிருக்கின்றன.

நன்மைகள் தரும் அறிவிப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டதுடன், மத்திய அரசின் வக்ஃப் திருத்தச் சட்டம் போன்ற தீமைகளைத் தடுக்கும் வகையிலான தீர்மானங்களையும் திராவிட மாடல் அரசின் இந்த சட்டப் பேரவைக் கூட்டத்தொடரில் நிறைவேற்றியுள்ளோம். மாநில உரிமைகளுக்கான குரலை நாம் ஓங்கி ஒலிக்கும் நிலையில், இந்தியாவின் ஒருமைப்பாடும் நாட்டின் பாதுகாப்பும் எந்தவிதத்திலும் பாதிக்கக்கூடாது என்ற இதயப்பூர்வமான அக்கறையுடன் காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, மத்தியஅரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு முழுமையான ஒத்துழைப்பு அளிக்கும் என்ற தீர்மானத்தையும் ஒருமனதாக நிறைவேற்றியுள்ளோம்.

தேசபக்தி என்பது நமக்குத் தேர்தல் அரசியல் முழக்கமல்ல. மாநில உரிமைகளுடனான கூட்டுறவுக் கூட்டாட்சி மிக்க இந்தியா என்பதே உண்மையான தேசபக்தியாகும். அரசியல் சட்டமாண்பினைக் காக்கும் செயல்பாட்டுடன் இந்தியாவின் பாதுகாவலனாகவும், தமிழ்நாட்டிற்குள் மதவாத அரசியல் தலையெடுக்காமல் தடுக்கும் அரணாகவும் உங்களில் ஒருவனான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் இறுதி வரை உறுதியாக நிற்பேன். கூட்டத் தொடர் நிறைவடைந்த நாளில், எதிர்க்கட்சித் தலைவர் அவைக்கு வராததால், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கும் தோழமைக் கட்சி உறுப்பினர்களுக்கும் கை குலுக்கி நன்றி தெரிவித்து விடைபெற்றேன்.

ஆட்சிக்கு வந்த நான்காண்டுகளாக ஜனநாயகப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம். சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் நிறைவு நாளில் நான் குறிப்பிட்டேன். "மேலே பாம்பு, கீழே நரிகள், குதித்தால் அகழி, ஓடினால் மதில் சுவர்கள் என்பது போல ஒரு பக்கம் மத்திய அரசு, மறுபக்கம் ஆளுநர், நிதி நெருக்கடி எனப் பல தடைகளைத் தாண்டி சாதனை படைத்து வருகிறோம்" என்று. திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்கொள்ளாத நெருக்கடிகள் இல்லை. சந்திக்காத சவால்கள் கிடையாது. சாதிக்காத திட்டங்கள் கிடையாது. இதை உடன்பிறப்புகளான நீங்கள் இத்தனை காலம் உணர்ந்திருப்பதுபோல, இப்போது பொதுமக்களும் புரிந்துகொண்டிருக்கிறார்கள். தி.மு.க என்பது தமிழ்நாட்டின் நலனை மட்டுமின்றி, இந்தியாவின் ஜனநாயகத்தையும் காக்கின்ற இயக்கம் என்பதை எதிரிகளின் மனசாட்சியும் சொல்லும் என்று குறிப்பிட்டுள்ளார்.


# மத்திய-மாநில அரசை வலியுறுத்தி தே.மு.தி.க. சார்பில் தீர்மானம்

**சென்னை, மே 01-**

மறைந்த தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்துக்கு பாரத ரத்னா விருது வழங்க மத்திய அரசையும் மணி மண்டபம் கட்ட தமிழக அரசை வலியுறுத்தியும் அக்கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே உள்ள வெள்ளிச்சந்தையில் தேமுதிக மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் நேற்று காலை தொடங்கி நடைபெற்று வருகின்றது. இந்த கூட்டத்தில், மறைந்த விஜயகாந்த்துக்கு பாரத ரத்னா விருது வழங்கக் கோரி மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், விஜயகாந்த்துக்கு தமிழக அரசு சார்பில் மணிமண்டபம் கட்ட வேண்டும், சென்னை வடபழனி 100 அடிச் சாலைக்கு அவரது பெயர் சூட்ட வேண்டும் என்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதேபோல், வக்ஃப் சட்டத்தால் இஸ்லாமியர்களின் சொத்துகளுக்கு பாதிப்பு ஏற்படாது என்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் உள்பட மொத்தம் 10 தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. முன்னதாக, கட்சியின் இளைஞரணி செயலாளராக விஜயகாந்தின் மூத்த மகன் விஜய பிரபாகரன் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.



பாம்பன் கடலில் புதிதாக கட்டப்பட்ட ரயில் பாலத்தில் கப்பல் கடந்து செல்ல அமைக்கப்பட்ட மேல் நோக்கி செல்லும் வகையில் இயத்திரம் மூலம் இயக்கப்படும் செங்குத்து தூக்குப்பாலம் ரயில் போக்குவரத்து துவங்கப்பட்ட பின்பு நேற்று முதல் முறையாக மேலே தூக்கப்பட்டது. அப்போது விசாகப்பட்டினத்தில் இருந்து பாம்பன் வடக்கு கடலோரப்பகுதிக்கு வருகை தந்து காத்திருந்த சரக்கு கப்பல் பாலத்தை கடந்து தென் கடலோரப்பகுதி வழியாக கர்நாடகாவின் கார்வார் துறைமுகம் பகுதிக்கு சென்ற காட்சி.

# சொறிப்பாறைப்பட்டி பலத்த மழை: ஜல்லிக்கட்டு போட்டி நிறுத்தம்



**நத்தம், மே 01-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சேத்தூர் ஊராட்சி சொறிப்பாறைப் பட்டி சங்கரன்பாறையில் முத்துமாரியம்மன், பாலமுருகன் கோவில் திருவிழாவை முன்னிட்டு நேற்று ஜல்லிக் கட்டு போட்டி நடைபெற இருந்தது.

இந்நிலையில் சொறிப் பாறைப்பட்டி பகுதியில் கடந்த 2 நாட்களாக பலத்த மழை பெய்தது. இதனால் வாடிவாசல் உள்ளிட்ட இடங்களில் தண்ணீர் தேங்கியது.

இதனிடையே நேற்று முன்தினம் மாலை ஜல்லிக் கட்டு நடைபெறும் இடத்தில் தாசில்தார் பாண்டியராஜ், போலீஸ் - இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன் மண்டல துணை வட்டாட்சியர் சுந்தரபாண்டியன் உள்ளிட்ட வருவாய்த்துறையினர், போலீசார்கள் ஆய்வு செய்தனர். தொடர்ந்து ஆய்வு குறித்து மாவட்ட நிர்வாகத்திடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் விசாரணை செய்த வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு) சுகுமார் மழைநீர் தேங்கியிருப்பதாலும், இதனால் பாதுகாப்பு குறைபாடுகள் இருப்பதாகவும் கூறி ஜல்லிக்கட்டு போட்டியை தற்காலிகமாக ஒத்திவைக்கபடுவதாக அறிவித்துள்ளார். இதனால் கிராம மக்கள் ஆழ்ந்த சோகத்தில் உள்ளனர்

## ராமநாதபுரம் மாவட்டத்தில்
# கோடை பருவத்தில் உளுந்து சாகுபடி உயர் விளைச்சல் பெற ஆலோசனை



**ராமநாதபுரம், மே 01-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் கோடை பருவத்தில் உளுந்து சாகுபடி செய்து உயர்விளைச்சல் பெற வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். மனிதனின் வாழ்வில் பயறு வகைகள் மிக இன்றியமையாத உணவுப் பொருள்களாகும். இவற்றில் அதிக அளவு புரதச்சத்தும் அமினோ அமிலங்களும் செறிந்துள்ளன. இவை கால்நடைகளுக்கும் உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. மிக குறைவான வயதுடைய பயறு வகைப் பயிரான உளுந்து 65-70 நாட்களில் பலன் தரக்கூடியது. உளுந்து சாகுபடிக்கு தேவையான நீரின் அளவும் மிகக் குறைவு. உளுந்து பயிருக்கு தண்ணீர் காட்ட வேண்டும். பாத்தி கட்ட வேண்டிய அவசியம் ஏற்படாது. கோடைப் பருவத்திற்கேற்ற உயர் விளைச்சல் தரும் உளுந்து (வம்பன் 6 மற்றும் வம்பன் 8) ரகங்களை தேர்ந்தெடுத்து சாகுபடி செய்தல் வேண்டும். சரியான அளவில் தரமான சான்று பெற்ற விதைகளை 1 கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் டிரைக்கோடர்மா உயிர் பூஞ்சான விதை நேர்த்தி செய்து பயன்படுத்த வேண்டும். ஏக்கருக்கு 200 கிராம் ரைசோபியம் நுண்ணுயிர் கலவை மற்றும் பாஸ்போ பாக்டீரியா கலவையை ஆற வைத்த கஞ்சியுடன் கலந்து விதைப்பது மண்ணுக்கும் பயிருக்கும் மிகவும் நல்லது. பரிந்துரைப்படி பயிர் எண்ணிக்கையை ஒரு சதுர மீட்டருக்கு 33 செடிகள் என்ற அளவில் பராமரிக்க வேண்டும். பூக்கும் பருவத்திலும் காய்பிடிக்கும் பருவத்திலும் நீர்ப்பாசனம் அவசியம்.

பூக்கள் உதிர்வதைத் தடுக்க 4 கிலோ டிஏபியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து (2 சதவீதம்) டிஏபி கரைசலுடன் 40 மிலி கிராம் நாப்தலின் அசிடிக் அமிலத்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்க ஆரம்பித்தவுடன் ஒரு முறையும் 15 நாட்கள் இடைவெளியில் மறுபடியும் அதே அளவில் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் தெளிக்க வேண்டும். கோடையில் உளுந்து சாகுபடி செய்வதால் வளிமண்டல நைட்ரஜனை கிரகித்து வேர் முடிச்சுகளில் சேமிக்கின்றது. இதனால் மண்வளம் மேம்படுகிறது. அறுவடைக்குப்பின் பெறப்படும் உளுந்து செடி கால்நடைகளுக்கு சிறந்த புரத உணவாகும். எனவே, ராமநாதபுரம் மாவட்டத்தில் கோடையில் உளுந்து சாகுபடி செய்து குறுகிய காலத்தில் உபரி வருமானம் விவசாயிகள் பெறலாம். இந்த தகவலை ராமநாதபுரம் மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் சிவகாமி தெரிவித்துள்ளார்.

# ஒட்டன்சத்திரத்தில் ஊராட்சிகளில் வரி இனங்கள் சீர் செய்வது குறித்து பயிற்சி முகாம்

**ஒட்டன்சத்திரம், மே 01-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊராட்சிகளில் வரி இனங்களை சீர் செய்வது குறித்து பயிற்சி முகாம் ஊராட்சிகளின் இணை இயக்குனர் (தணிக்கை) கருப்புசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் காமராஜ் (கி.ஊ) முன்னிலை வகித்தார்.

ஆய்வுக்கூட்டத்தில் ஊராட்சி பகுதிகளில் விதிக்கப்பட்டுள்ள வரி இனங்களை மறுசீர் செய்வது குறித்தும், ஊராட்சிகளில் செயல்படுத்த வேண்டிய அடிப்படை வசதிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. கூட்டத்தில் மேலாளர் பாலசுப்பிரமணி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சாமிநாதன், உள்ளிட்ட துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி செயலாளர்கள் கலந்துகொண்டனர் படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வரி இனங்களை சீர் செய்வது குறித்து பயிற்சி ஊராட்சிகள் இணை இயக்குனர் (தணிக்கை) கருப்புசாமி தலைமையில் நடைபெற்றது.

# அருப்புக்கோட்டை வழக்கறிஞர் சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு

**அருப்புக்கோட்டை, மே 01-**

அருப்புக்கோட்டையில் நடந்த வழக்கறிஞர் சங்க தேர்தலில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் அருப்புக்கோட்டை வழக்கறிஞர் சங்கத் தலைவராக கணேசனும், செயலாளராக லாவன்யாவும், பொருளாளராக பாலாஜியும், துணை தலைவராக ஜோதி மணியும், துணைச் செயலாளராக பாலசுப்பிரமணியம் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் இணை செயலாளராக அனுதாவும், துணைப் பொருளாளராக குருசாமியும், நிர்வாக குழு உறுப்பினராக ஸ்ரீ ஹரி, அம்பா சங்கர், அமுல்ராஜ், ஜெகதீசன் ,அஜய் அரவிந்த், ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். புதிதாக தேர்வு செய்யப்பட்ட வழக்கறிஞர் சங்க நிர்வாகிகளுக்கு வழக்கறிஞர்கள் வாழ்த்துக்கள் கோர்ட் அலுவலர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் மதுரை வேளாண்மை கல்லூரி மாணவன் கிராம விவசாய அனுபவ பணி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கருப்பு புஞ்ஜான் எவ்வாறு பரவுகிறது. அதனை கட்டுப்படுத்தும் முறையான மைதா மாவு நீரில் கலந்து அதனைக் கட்டுப்படுத்தலாம் என விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தார்.

## விருதுநகர், சாத்தூர் அருகே
# சட்ட விரோதமாக செயல்பட்ட பட்டாசு கிடங்கில் வெடி விபத்து



**விருதுநகர், மே 01-**

சாத்தூரில் சட்டவிரோதமாக செயல்பட்ட பட்டாசு கிடங்கில் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது.

விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம்பண்ணை அருகே முத்தாண்டியாபுரத்தில் ரகுநாதன்(50) என்பவருக்குச் சொந்தமான தனலட்சுமி என்ற பெயரில் இயங்கி வந்த தீக்குச்சி தயாரிப்புக் கிடங்கு, கடந்த 2 ஆண்டுகளாக செயல்படாமல் இருந்து வந்துள்ளது. இந்த தீக்குச்சி கிடங்கில் நேற்று (புதன்கிழமை) அதிகாலையில் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது.

சம்பவம் அறிந்து சென்ற தீயணைப்புப்படையினர் நீண்ட நேரம் போராடி தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். அதிகாலை நேரம் என்பதால் உள்ளே யாரும் இல்லாததன் காரணமாக பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. போலீசார் நடத்திய விசாரணையில், ரகுநாதன் என்பவருக்குச் சொந்தமாக கரிசல்பட்டி பகுதியில் செயல்பட்டு வந்த பட்டாசு ஆலையில் விதிமீறல் காரணமாக சமீபத்தில் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து தற்போது வெடி விபத்து ஏற்பட்ட கிடங்கில் உரிய அனுமதி இல்லாமல் சட்ட விரோதமாக பட்டாசு தயாரித்து பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பட்டாசுகளை பதுக்கி வைத்திருந்தது தெரிய வந்தது. மின் கசிவு காரணமாகவோ அல்லது பட்டாசு தயாரிக்கும்போதோ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இந்த வெடி விபத்தில் சுமார் 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான பட்டாசுகள் எரிந்து சேதமானது. இதுதொடர்பாக ஏழாயிரம் பண்ணை போலீசார் வழக்குப்பதிவு செய்து, உரிமையாளர்கள் மணிசங்கர் குருநாதன் ஆகிய இருவரைப் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திண்டுக்கல் ரெயில் நிலையத்தில் கருப்பட்டி விற்பனைக்கு அனுமதி

**திண்டுக்கல், மே 01-**

நாடு முழுவதும் ரெயில்களில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து கொண்டே இருக்கிறது. இதனால் முக்கிய நகரங்களில் உள்ள ரெயில் நிலையங்களுக்கு, தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். ரெயில் பயணிகளுக்கு, அந்தந்த ஊரில் தயாராகும் முக்கிய பொருட்கள் கிடைக்கும் வகையில் ரெயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி திண்டுக்கல் ரெயில் நிலையத்தில் சின்னாளப்பட்டி சுங்குடி சேலைகள், காபித்தூள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன. இதனை வெளியூர்களில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். இதற்கிடையே எரியோடு, கோவிலூர் சுற்றுவட்டார கிராமங்களில் கருப்பட்டி தயாரிக்கப்படுகிறது. இதனை வெளியூர்களில் இருந்து வரும் மக்கள், கடைகளில் கேட்டு வாங்கி செல்கின்றனர். இதனால் ரெயில் நிலையத்தில் கருப்பட்டி விற்கப்படுமா? என்பது ரெயில் பயணிகளின் எதிர்பார்ப்பாக இருந்தது.

இதுதொடர்பாக ரெயில்வே நிர்வாகத்துக்கு, அதிகாரிகள் பரிந்துரை அனுப்பினர். இதையடுத்து திண்டுக்கல் ரெயில் நிலையத்தில் கருப்பட்டி விற்பனை செய்வதற்கு ரெயில்வே நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி விரைவில் கருப்பட்டி விற்பனை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# குரூப் 1 தேர்வுக்கு விண்ணப்பிக்க தடையில்லா சான்றிதழ் கோரி வழக்கு

**மதுரை, மே 01-**

குரூப் 1 தேர்வுக்கு விண்ணப்பிக்க தடையில்லா சான்றிதழ் கோரி திருநங்கை தொடர்ந்துள்ள வழக்கில் வணிக வரித் துறை செயலாளர் பதிலாளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த ஸ்வப்னா, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: நான் திருநங்கை. பல்வேறு இடர்பாடுகளை கடந்து,

பி ஏ படித்து முடித்தேன். கடந்த 2019 ல் குரூப்-I தேர்வில் வெற்றி பெற்றேன். பிஎஸ்டிஎம் ( தமிழ் வழி கல்வி) சலுகை அடிப்படையில் பணி ஒதுக்கீடு பெற்று வணிக வரித்துறையில் உதவி ஆணையராக பணிபுரிந்து வந்தேன். இந்நிலையில் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் பெறப்பட்ட எனது பிஎஸ்டிஎம் சான்றிதழ் செல்லாது என்று 2024-ல் உத்தரவிடப்பட்டது. இதையடுத்து என் மீது மதுரை லஞ்ச ஒழிப்பு துறை போலீஸார் வழக்கு பதிவு செய்தனர். இதனால் என்னை பணி இடைநீக்கம் செய்தனர். இந்நிலையில், குரூப்-1 தேர்வுக்கு கடந்த 1-ம் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த குரூப் 1 தேர்வுக்கு நான் விண்ணப்பிக்க வேண்டும். எனக்கு தடையில்லாச் சான்றிதழ் வழங்க வேண்டி, வணிக வரி துறையில் விண்ணப்பித்தேன். ஆனால், தடையில்லாச் சான்றிதழை வழங்க மறுக்கின்றனர். எனவே, நான் குரூப் 1 தேர்வுக்கு விண்ணப்பிக்க எனக்கு தடையில்லாச் சான்றிதழ் வழங்க வணிக வரி துறைக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி பட்டு தேவானந்த், மனு குறித்து வணிக வரித்துறை செயலர் , பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.





மதுரை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த் உத்தரவின் பேரில் திருமங்கலம் உட்கோட்ட காவல்துறை சார்பில் பொதுமக்கள் மனுக்கள் மீதான குறை தீர்க்கும் நாள் முகாம் ஏ.எஸ்.பி அன்சுல் நாகர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

## மதுரை அத்லட்டிக் அகாடமி சார்பில்
# மேலூரில் மாநில அளவிலான தடகள போட்டி



**மேலூர், மே 01-**

மதுரை அத்லட்டிக் அகாடமி சார்பில் முதலாம் ஆண்டு மாநில அளவிலான மாணவ மாணவியருக்கான தடகள போட்டி - 2025 மேலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 27-ம் தேதி நடைபெற்றது.

தடகளப் போட்டியில் பங்கேற்பதற்காக மதுரை திருச்சி,திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இருந்து 700-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின் போட்டிக்கான முன்னேற்பாடுகளை செய்து கொடுத்தார். மதுரை மாவட்ட அமெச்சூர் கபடிக் கழக துணைச் செயலாளர் மேலூர் எம்.சாகுல் ஹமீது, மேலூர் மஸ்தான் லாரி செட் லயன்ஸ் கிளப் இ. ஜார்ஜியான் ஆகியோர் தலைமை தாங்கி தடகள போட்டியை தொடங்கி வைத்தனர்.

தடகள போட்டியில் முதல் பரிசினை பரமக்குடி அசுகரன் விளையாட்டு கழகத்தின் பயிற்சியாளர் கி. அருண் கிருஷ்ணன் வெற்றி கோப்பை பெற்றர். இரண்டாம் பரிசினை திருச்சி டீம் ஸ்போர்ட்ஸ் கிளப், மூன்றாம் பரிசினை கோவில் பட்டி கே.ஆர்.ஏ ஸ்போர்ட்ஸ் அகடாமி வெற்றி கோப்பை பெற்றனர். சிறப்பு விருந்தினர்களாக லயன்ஸ் கிளப் தலைவர் சந்தான பிரபு, லயன்ஸ் கிளப் செயலாளர் சந்தோஷ், ஸ்ரீ ஹரி வைரப் பிரகாஷ் ஸ்விட் அன்ட் ஹோட்டல் உரிமையாளர் லயன் வைரமுத்து, மேலூர் அல்-அமீன் பள்ளி தாளாளர் ஷாஜகான், மேலூர் டைல்ஸ் பார்க் உரிமையாளர் முரளி, மேலூர் அல்-அமீன் பள்ளி தலைமையாசிரியர் சம்சுதீன் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினர்.

விழாவில் துருவன் மல்டிஸ்பெசாலிட்டி நிறுவன இயக்குனர் என். ராஜா, மதுரை அத்லட்டிக் தலைவர் கே. யோகா சஞ்சய், மதுரை அத்லட்டிக் அகடாமி துணைத்தலைவி எம்.வனிதா, மீனாட்சி ரியல் எஸ்டேட் நிறுவன இயக்குனர் டி.கே. ரமேஷ், உடற்கல்வி ஆசிரியர் கோ. பசுபதி, உடற்கல்வி இயக்குனர் மா.வீரபாண்டி, ஆகியோர் தடகள போட்டிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். மேலூர் அல்-அமீன் பள்ளி, மதுரை எம்.கே. விளையாட்டுக் கழகம், ராசா டாக்ஸிகண்ட்ஸ் யுனைடெட், ஐஏஏ அகாடமி, ஸ்பிரிண்ட்ஸ் ஸ்பைடர்ஸ், விஸ்வா விளையாட்டு அகாடமி, ஆர்.பி.ஏ மத்தியப் பள்ளி, பாண்டியராஜன் விளையாட்டுக் கழகம், ஜி.எச்.எஸ். அணைகுட்டம் அரசுப் பள்ளி,ஜி.ஏ.சி விளையாட்டுக் கழகம் ஆகிய அணிகளில் இருந்து வந்திருந்த விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு சான்றிதழும், பதக்கமும், வெற்றிக் கோப்பையும் விழா குழுவினரால் வழங்கப்பட்டது.

# போலி புகார் அனுப்பும் நபர்கள் மீது நடவடிக்கை: மதுரை காவல் ஆணையருக்கு ஐகோர்ட் உத்தரவு

**மதுரை, மே 01-**

போலி புகார் அனுப்பும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க மதுரை மாநகர் காவல் ஆணையருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை மேலூரைச் சேர்ந்த வழக்கறிஞர் அமலன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: நான் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் கடந்த 20 ஆண்டுகளாக வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கறிஞர் அறை எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனது வழக்கறிஞர் அறைக்கு சென்றபோது எனது பெயரில் கடிதம் ஒன்று வந்தது. அதை பிரித்து படித்தபோது, காவல்துறை கண்காணிப்பாளர் மீது நான் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுத்ததாகவும், அந்த புகாருக்கு நான் நேரில் ஆஜராக வேண்டும் என லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் இருந்து சம்மன் வந்திருந்தது தெரியவந்தது.

இதைப் பார்த்து எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. நான் இதுபோன்று எந்தவித புகாரையும் கொடுக்கவில்லை. எனவே இதுகுறித்து உயர் நீதிமன்ற மதுரை அமர்வு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அப்போது தான் எனக்கு நடந்தது போல் பல வழக்கறிஞர், மூத்த வழக்கறிஞர்களின் பெயரில் லஞ்ச ஒழிப்புத்துறை மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இந்திய பிரதமர், ஜனாதிபதி ஆகியோருக்கு போலியான புகார்கள் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அந்த புகார்கள் குறித்து உரிய விசாரணை நடந்து வருவதும் தெரியவந்தது. இதுபோன்று பிற வழக்கறிஞர்கள் பெயர்களை பயன்படுத்தி புகார்கள் அனுப்புவதால், மூத்த வழக்கறிஞர்கள் மிகுந்த சங்கடத்திற்கு உள்ளாகின்றனர். மேலும் தனிப்பட்ட பகைமை உண்டாகிறது. மேலும் உயர் அதிகாரிகளின் நேரமும் வீணடிக்கப்படுகிறது. எனவே பிறர் பெயரை பயன்படுத்தி போலி புகார் அனுப்பும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி தனபால் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், "இந்த புகார் போல அரசு வழக்கறிஞர்களுக்கு எதிராகவும் அரசு வழக்கறிஞர்கள் பெயரை பயன்படுத்தியும் பல புகார்கள் அனுப்பப்பட்டுள்ளது. நீதிபதிகளுக்கும் இது போன்று புகார் சென்றுள்ளன. இதுகுறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது" என தெரிவித்தார். இதையடுத்து நீதிபதி, "பிறர் பெயரை பயன்படுத்தி போலி புகார் அனுப்பும் நபர்கள் மீது மதுரை மாநகர் காவல் ஆணையார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும." என உத்தரவிட்டார்.

# நத்தத்தில் விற்பனைக்கு வந்த வாட்டர் ஆப்பிள் பழங்கள்



**நத்தம், மே 01-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மா, பலா, வாழை, கொய்யா, பப்பாளி, சப்போட்டா, நாவல், மற்றும் சீத்தா உள்ளிட்ட பல்வேறு பழ வகைகள் ஆங்காங்கே சாகுபடி செய்யப்பட்டு, அந்தந்த காலகட்டங்களில் அறுவடை செய்யப்படுகிறது. இந்தநிலையில் தற்போது நத்தம் பகுதியில் வாட்டர் ஆப்பிள் பழ அறுவடை சீசன் தொடங்கியுள்ளது.

அதிக இனிப்பு, சுவைகள் நிறைந்த வாட்டர் ஆப்பிள் பழத்தை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஆர்வத்துடன் வாங்கி சாப்பிடுவார்கள். இதையொட்டி அறுவடை செய்யப்பட்ட வாட்டர் ஆப்பிள் பழங்கள் நத்தம் பகுதி மார்க்கெட்டுகளில் விற்பனைக்காக குவிந்துள்ளது. குறிப்பாக நத்தம் பஸ் நிலையம் மற்றும் மார்க்கெட்டில் வியாபாரிகள் வாட்டர் ஆப்பிள் பழத்தை விற்பனை செய்து வருகின்றனர். ஒரு கிலோ வாட்டர் ஆப்பிள் பழம் ரூ.80 முதல் ரூ.100 வரை விற்கப்படுகிறது.

இளம் சிவப்பு வண்ணத்துடன், அதிக நீர்ச்சத்து கொண்ட இந்த ஆப்பிள் பல்வேறு மருத்துவ குணங்கள் நிறைந்தது. வாட்டர் ஆப்பிளில், வைட்டமின் சி, ஏ, பி1, பி3, இரும்புச்சத்து, கால்சியம், பொட்டாசியம் ஆகிய பல்வேறு சத்துக்கள் நிறைந்துள்ளதாகவும், இதிலுள்ள பிளேவனாய்டுகள் எனும் பினாலிக் கலவைகள், இதய நோய், புற்றுநோய் மற்றும் மூட்டுவலி போன்ற பிரச்சினைகளுக்குச்சிறந்த தீர்வாக அமைகிறது எனவும் சொல்லப்படுகிறது.




● சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் த.வேலுவின் மகள் அனுஷா-தருண் தன்ராஜ் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்தினார். இத்திருமணத்தில் முதல்வரின் துணைவியார் துர்கா ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, என்.கயல்விழி செல்வராஜ், எம்.பி.க்கள் தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி, அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● சென்னை கொளத்தூர் பெரியார் அரசு மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக உயிர் காக்கும் கருவிகள் பொருத்திய அதிநவீன அவசர ஊர்தி மற்றும் பேட்டரியால் இயங்கும் 2 வாகனங்களின் சேவைகளை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ்.இருதயராஜ் வாடிகனில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ்சின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்றதையொட்டி சந்தித்து போப் பிரான்சிஸ்சின் திருவுருவப்படத்தை வழங்கினார். உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் உள்ளனர்.




● புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் வார விழா தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழக வளாகத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் "கவிச்சரம்" நிகழ்ச்சியை கவிப்பேரரசு வைரமுத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார், எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நாராயணசாமி, பதிவாளர் சிவசங்கீதா, வித்தகக்கவிஞர் பா.விஜய், கவிச்சுடர் கவிதைப்பித்தன், நெல்லை ஜெயந்தா, கவிஞர் யுகபாரதி, தஞ்சை இனியன், இரா.கருணாநிதி கலந்து கொண்டனர்.



● தஞ்சாவூர் மாவட்டம் திருபுவனம் காமராஜ் நகரில் கலைஞரின் கனவு இல்லம் கட்டுவதற்கான வேலை உத்தரவு மற்றும் வீட்டுமனை பட்டாவினை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.ராமலிங்கம், திட்ட இயக்குநர் மு.பாலகணேஷ், சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ்.விஜயன் உடனிருந்தனர்.

## கொல்கத்தா ஹோட்டலில் தீ விபத்து:
# 3 தமிழர்கள் உள்பட 14 பேர் உயிரிழப்பு

கொல்கத்தா, மே 01-

மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் தனியார் ஹோட்டல் ஒன்றில் நேற்றிரவு ஏற்பட்ட தீ விபத்தில் 3 தமிழர்கள் உள்பட 14 பேர் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்துள்ளனர்.

கொல்கத்தாவின் மெச்சுவா என்ற பகுதியில் உள்ள புர்ராபசாரில் அமைந்துள்ள ரிதுராஜ் என்ற 6 மாடிகள் கொண்ட ஹோட்டலின் முதல் தளத்தில் நேற்று முன்தினம் இரவு 8.15 மணி அளவில் தீ விபத்து ஏற்பட்டது. அப்போது ஹோட்டலில் 42 அறைகளில் 88 பேர் இருந்துள்ளனர். சுமார் 60 ஊழியர்கள் பணியில் இருந்துள்ளனர்.

முதல் மாடியில் தீ விபத்து ஏற்பட்டதால் தீ அடுத்தடுத்த மாடிகளுக்கும் பரவியுள்ளது. மேலும், அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சி அளித்துள்ளது. இதில், 13 பேர் மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்தனர். ஒருவர், மாடியில் இருந்து கீழே குதித்ததில் படுகாயம் அடைந்து உயிரிழந்தார்.



மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்தவர்களில் 2 குழந்தைகளும் அடக்கம். காயமடைந்த 13 பேரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 12 பேர் டிஸ்சார்ஜ் ஆகி உள்ளனர். ஒருவர் மட்டும் தொடர் கண்காணிப்பில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தா தீ விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்தனர். கரூர் மாவட்டம் உப்பிடமங்கலத்தை அடுத்த ஜோதிவடத்தை சேர்ந்தவர் பிரபு (40). இவர் கற்றாழை மூலப்பொருட்களை கொண்டு பொருட்கள் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார். மனைவி மதுமிதா, மகள் தியா (10), மகன் ரிதன் (3). பிரபு அவர் மனைவி, குழந்தைகள், அவரது மாமனார் முத்துகிருஷ்ணன் (61) ஆகியோருடன் கொல்கத்தாவுக்கு சுற்றுலா சென்றிந்தார். விபத்தின் போது ஹோட்டல் அறையில் இருந்த முத்துகிருஷ்ணன், அவரது பேரக்குழந்தைகள் தியா, ரிதன் ஆகிய 3 பேரும் மூச்சுத்திணறி, உடல்கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். இரவு உணவு வாங்குவதற்காக பிரபுவும் அவர் மனைவி மதுமிதாவும் வெளியே சென்றதால் உயிர் பிழைத்தனர்.

இந்த தீ விபத்து குறித்து செய்தியாளர்களிடம் பேசிய காவல்துறை ஆணையர் மனோஜ் குமார் வர்மா, "ரிதுராஜ் ஹோட்டலில் ஏற்பட்ட தீ விபத்தில் மொத்தம் 14 பேர் உயிரிழந்துள்ளனர். விசாரணை நடைபெற்று வருகிறது.

இது குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களில்,8 உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும், மீதமுள்ள உடல்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது என்றும் போலீஸார் தெரிவித்துள்ளனர்.

## 234 தொகுதிகளிலும் வெற்றி...(1-ம் பக்க தொடர்ச்சி)

கொண்டிருக்கிறது. நான் நேற்றுதான் பார்த்தேன். முன்பே பார்த்து இருந்தால் சட்டமன்றத்தில் சொல்லியிருப்பேன்.

**சிபாரிசு செய்கிறேன்...**

அப்போது கூட கேட்டேன். உதயகுமார் சட்டப்பேரவையில் எழுந்து நின்று, விடாமல் "தவழ்ந்து" என்ற வார்த்தையை எடுத்துவிடுங்கள், வேண்டாம், என்று சொல்லிக் கொண்டே இருந்தார். நான் சொன்னேன். யாரையாவது குறிப்பிட்டு நான் பேசியிருப்பதாக நீங்கள் கருதினால், யார் என்று சொல்லுங்கள். நான் எடுத்துவிடுகிறேன். அதற்கு நானே சிபாரிசு செய்கிறேன் என்று சொன்னேன். உட்கார்ந்துவிட்டார். இதுதான் நடந்தது. ஏறக்குறைய ஒரு மாத காலத்துக்கும் மேலாக சட்டமன்றக் கூட்டத்தொடர் நடந்து முடிந்திருக்கிறது. அந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஒவ்வொரு நாளும் நம்முடைய திராவிட மாடல் அரசின் சார்பில் மானியக் கோரிக்கைகளை விவாதித்து அதற்கு அமைச்சர்கள் பதில் அளிக்கும் நேரத்தில் என்னென்ன திட்டங்களையெல்லாம் சொல்லியிருக்கின்றோம். அதைத் தொடர்ந்து 110-விதியைப் பயன்படுத்தி என்னென்ன பணிகளையெல்லாம் நாம் நிறைவேற்றப்போகிறோம்.

அதற்குப் பிறகு கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் என்னென்ன பிரச்சினைகள் எல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம் என்பதைப்பற்றியெல்லாம் நீங்கள் தொலைக்காட்சிகளில், சமூக வலைதளங்களில், பத்திரிகைகளில் நன்றாகப் பார்த்திருப்பீர்கள். ஆகவே, இன்றைக்கு மற்ற மாநிலத்துக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே, உலகத்துக்கே வழிகாட்டக்கூடிய ஒரு சிறப்பான ஆட்சியை நாம் இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறோம்.

**234 தொகுதிகளில்...**

தேர்தல் நேரத்தில் என்னென்ன உறுதிமொழிகளை, வாக்குறுதிகளை நாம் சொல்லியிருக்கிறோமோ, அந்த வாக்குறுதிகளை படிப்படியாக இன்றைக்கு எப்படியெல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். இப்போது சொல்லப்பட்டிருக்கும் அந்த உறுதிமொழிகளும் விரைவாக நிச்சயமாக உறுதியாக நிறைவேற்றப்பட்டு நான் உறுதியோடு சொல்கிறேன். இங்கு கூட பேசுகின்றபோது சிலர் சொன்னார்கள். கண்ணப்பன் பேசுகின்றபோது சொன்னார். 200 அல்ல 220 வரும் என்று அவர் சொன்னார். அதில் என்ன கஞ்சம் 234 தொகுதிகள் என்றே சொல்லுங்கள். வந்தாலும் ஆச்சரியமில்லை.

**ஒரு கை பார்ப்போம்....**

ஏன் என்றால், செல்லும் இடங்களிலெல்லாம் அந்த வரவேற்பைப் பார்க்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் செல்கின்றபோது நான் 4 முதல் 5 கிலோ மீட்டர் வரை நடந்தே செல்கிறேன். அப்போது, மக்கள் திரண்டு வந்து வரவேற்கும் காட்சியைப் பார்க்கும்போது உள்ளபடியே மெய் சிலிர்த்துப்போகிறேன். ஆகவே, நிச்சயமாக, உறுதியாக நம்மை எதிர்க்கக் கூடியவர்கள் எந்த நிலையில் வந்தாலும் சரி எப்படிப்பட்ட கூட்டணியை வைத்துக்கொண்டு வந்தாலும் சரி, ஒரு கை பார்ப்போம் என்ற உணர்வோடு தான் நாம் இன்றைக்கு நம்முடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கிறோம்.

எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அது வருமான வரித் துறையாக இருந்தாலும் சரி அல்லது புலனாய்வுத் துறையாக இருந்தாலும் சரி, சி.பி.ஐ. வைத்து மிரட்டக்கூடியதாக இருந்தாலும் சரி, அமலாக்கத்துறை என்ற எந்த துறையாக இருந்தாலும் சரி இப்படி எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஏனென்றால், நெருக்கடியைப் பார்த்து வளர்ந்திருக்கக்கூடியவர்கள் நாம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## கண்ணியத்துடன் நடத்தப்பட...(1-ம் பக்க தொடர்ச்சி)

காவல்நிலையம் வந்து காவல் ஆய்வாளருக்காக பல மணி நேரம் காத்திருந்த பிறகு, காவல் ஆய்வாளர் வந்து, புகாரை ஏற்க முடியாது என்று கூறி, மனுதாரரின் தாயையும் தகாத வார்த்தைகளால் பேசியிருக்கிறார்.

இது குறித்து தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம் விசாரித்து, மனுதாரருக்கு ரூ.2 லட்சம் இழப்பீடாக வழங்க தமிழக உள்துறை கூடுதல் முதன்மைச் செயலாளருக்கு உத்தரவிட்டது. இந்தத் தொகையை ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் ஆய்வாளரிடமிருந்து வசூலித்துக் கொள்ளவும் அனுமதி வழங்கியது. இந்த நிலையில், தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையத்தின் உத்தரவையும், அதனை உறுதி செய்த சென்னை உயர் நீதின்ற உத்தரவையும் எதிர்த்து பவுல் யேசு தாசன் (காவல் ஆய்வாளர்) சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மறுத்ததுடன், மனுதாரரின் தாயை தகாத வார்த்தைகளால் பேசியிருக்கிறீர்கள். இது மனித உரிமைகளுக்கு எதிரானது.

அதாவது, மனித உரிமைகள் சட்டப் பிரிவு 2(1)(டி) மனித உரிமைகளை ஒரு தனி நபரின் வாழ்க்கை, சுதந்திரம், சமத்துவம் மற்றும் கண்ணியம் தொடர்பான உரிமைகள், அரசியலமைப்பால் அல்லது சர்வதேச உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட மற்றும் இந்தியாவில் நீதிமன்றங்களால் செயல்படுத்தக்கூடிய வகையில் உறுதி செய்யப்படுகிறது என்று வரையறுக்கிறது.

இந்த வழக்கின் குறைந்தபட்ச குற்றச்சாட்டான எஃப்ஐஆர் பதிவு செய்ய மறுத்திருப்பதே அதிர்ச்சியளிக்கிறது. புகார் அளிக்க வருவோருக்கு குறைந்தபட்சம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும்.

ஆனால் காவல் துணை ஆய்வாளர் எஃப்ஐஆர் பதிவு செய்யவில்லை. மேலதிகாரியிடம் அனுப்பியிருக்கிறார். அவரும் முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்யாமல் மனுதாரரின் தாயாரை தகாத வார்த்தைகளால் பேசியிருக்கிறார்.

எனவே, இந்த வழக்கில் மனித உரிமைகள் ஆணையமோ, சென்னை உயர் நீதிமன்றமோ தவறான தீர்ப்பை அளிக்கவில்லை என்று முடிவுக்கு வருகிறோம். இந்த மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்கிறோம்.

இங்கே மேல்முறையீடு செய்திருக்கும் மனுதாரரின் நடத்தையை ஆராய்ந்ததில், மனுதாரரின் தரப்பில் மனித உரிமைகள் மீறல் இருப்பதாக ஆணையமும் உயர் நீதிமன்றமும் சரியாகக் கண்டறிந்தன.

எனவே, எந்த தலையீடும் தேவையில்லை. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று உத்தரவிட்டனர்.

## பஹல்காம் தாக்குதலின் பின்னணியில்
# லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் தளபதி: என்.ஐ.ஏ. அதிர்ச்சி தகவல்

ஸ்ரீநகர், மே 01-

பஹல்காம் தாக்குதலின் பின்னணியில் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் தளபதி பரூக் அகமதுவின் வலையமைப்பு முக்கிய பங்கு வகித்ததாக என்.ஐ.ஏ. விசாரணையில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காமில் உள்ள சுற்றுலா தளத்தில் கடந்த 22ம் தேதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டண்ட் பிரண்ட் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

இந்த தாக்குதல் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ.) விசாரணைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது. இந்தசூழலில், பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக முறைப்படி வழக்குப்பதிவு செய்த என்.ஐ.ஏ. விசாரணையை தொடங்கியது. தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், தாக்குதல் நடைபெற்றபோது சம்பவ இடத்தில் இருந்தவர்கள், தாக்குதலில் இருந்து உயிர் தப்பியவர்களிடம் என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் காஷ்மீர் தீவிரவாத தாக்குதல் தொடர்பாக 2 ஆயிரம் பேரிடம் என்.ஐ.ஏ. விசாரணை நடத்தி உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேடப்படும் தீவிரவாதியான பரூக் அகமது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து செயல்பட்டு வந்துள்ளார் என்றும், மற்ற தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் நுழைய பரூக் அகமது உதவியதாக என்.ஐ.ஏ. சந்தேகிக்கிறது. மேலும் தீவிரவாதிகளுக்கு உதவியதாக சந்தேகிக்கப்படும் 15 பேரை தொடர்ந்து விசாரிக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பஹல்காமில் தாக்குதலை நடத்த பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாதிகளுக்கு உதவுவதில் லஷ்கர்-இ-தொய்பா உயர் தளபதி பரூக் அகமதுவின் வலையமைப்பு முக்கிய பங்கு வகித்ததாக தேசிய புலனாய்வு அமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பரூக் அகமது ஓவர் கிரவுண்ட் வொர்க்கர்களை பயன்படுத்தி தாக்குதலுக்கான நெட்வொர்க்கை அமைத்துள்ளார் என்றும், கடந்த 2 ஆண்டுகளில் பரூக்கின் ஸ்லீப்பர் செல் நெட்வொர்க் மூலம் பல பயங்கரவாத செயல்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும், இவற்றில், 25 சுற்றுலாப் பயணிகளையும் ஒரு காஷ்மீரியையும் கொன்ற பஹல்காம் தாக்குதல் மிக முக்கியமானதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும் பாகிஸ்தானின் 3 எல்லைகளில் இருந்து பயங்கரவாதிகளை காஷ்மீருக்குள் அனுப்புவதில் பரூக் முக்கிய பங்கு வகிப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடு முழுவதும் சாதிவாரி...
(1-ம் பக்க தொடர்ச்சி)

கரும்புக்கு நியாயமான மற்றும் லாபகரமான விலை குவிண்டாலுக்கு ரூ.355 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கும் கீழாக விலை நிர்ணயிக்க முடியாது." என தெரிவித்தார். பீகார், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் ஏற்கனவே மாநில அரசுகள் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி விட்டன. தெலுங்கானா மாநிலத்திலும் இதற்கான பணிகள் நடந்து வருகின்றன. தேசிய அளவில் சாதி வாரி மக்கள் தொகைகணக்கெடுப்பு நடத்தவேண்டும் என மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் கூறி வந்தார். தமிழகம் உள்ளிட்ட சில மாநிலங்களும் இந்த கோரிக்கையை விடுத்து இருந்தது குறிப்பிடத்தக்கது.